இதழ் 367
29 நவம்பர் 2025
20 பக்கங்கள்

# இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

youtube.com/@IlakkuWeb2.0
facebook.com/ilakku.ilakku.10
twitter.com/Ilakku1

# மாவீரர் நாள் 2025

## தாயகம், தமிழகம், புலம்பெயர் நாடுகளில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகளின் படத்தொகுப்பு

மாவீரர் மண்மீட்பு ஒன்றே இலக்கு என்று தெளிவு தந்தார்.
இந்த இலக்கை அடைய ஊடகம் முக்கிய ஆயுதம் என்றார்
மேதகு தேசியத் தலைவர்.
அத் தேசத்தலைவர் வழி 2018 மாவீரர் நாளில்
பயணிக்கத் தொடங்கிய
**‘இலக்கு’ மின்னிதழுக்கு அகவை 07!**
**வளர்ச்சிக்குதவிய அனைவருக்கும் நன்றி**
*எட்டாம் ஆண்டிலும் இயன்றதை தந்து*
*இலக்கு நோக்கி இலக்கு வெற்றிகரமாகப் பயணிக்க உழைப்பவர்*
*தொகை மேலும் மேலும்பெருக வைப்பது வாசகர் கடமை!*
**ஆசிரிய குழு**

## தமிழ் பௌத்தம் சிங்களப் பேரினவாதத்தின் கோரப்பிடியிலிருந்து தமிழரைக் காக்கும் தீர்வாகுமா?

— அருஷா




## அமெரிக்க – இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் ஒரு பார்வை

— விதுரன்



## சீரற்ற கால நிலையால் மக்களின் இயல்பு நிலை பாதிப்பு

கின்னியான்


© 2025 இலக்கு இணையம்

## டிட்வா புயலால் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாமென அச்சம்



திட்வா புயலின் தாக்கம் காரணமாக நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

அதேநேரம் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை முழுவதும் மழை வீழ்ச்சிக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பல பகுதிகளில் வெள்ளப் பெருக்கு சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன் நாடளாவிய ரீதியாக போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

பல இடங்களில் மின் துண்டிப்பு பதிவாகியுள்ளதுடன் பெரும்பாலான இடங்களில் தொலைத்தொடர்பு சேவை தடைப் பட்டுள்ளது.

குறிப்பாக கண்டி மாவட்டத்தில் மாத்திரம் 50 பேர் உயிரிழந்துள்ளதாக மாவட்ட செயலாளர் அறிவித்துள்ளார்.


அத்துடன் மேலும் 61 பேர் காணாமல் போயுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் பதுளை மாவட்டத்தில் 30க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன் 28 பேர் காணாமல் போயுள்ளதாக மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

பல இடங்களில் மண்சரிவு சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன் ஏற்பட்டுள்ள முழுமையான சேத விபரங்கள் வெளியாகுவதில் தாம

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## டிட்வா புயல் : இலங்கையை விட்டு இன்றுடன் முழுமையாக விலகும்!




டிட்வா புயல் 29.11.2025 சனிக்கிழமை காலை 8.00 மணி நிலைவரப்படி, ஏற்கனவே குறிப்பிட்டவாறு தற்போது சுண்டிக்குளத்தில் மையம் கொண்டு கடலுக்குள் சென்று கொண்டிருக்கின்றது. (காலை 8.00 மணி) மையத்தின் 30 வீதமான பகுதி கடலுக்குள் சென்றுள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தின் புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீப ராஜா தெரிவித்தார்.

மேலும்”டிட்வா புயல் இன்று நண்பகலளவில் முழுமையாக கடலுக்குள் சென்று விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த சில நாட்களாக பேரழிவுகளை ஏற்படுத்திய டிட்வா புயல் இன்றுடன் முழுமையாக இலங்கையை விட்டு விலகும்.

இன்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கு மிதமானது முதல் சற்று கனமான மழைக்கு வாய்ப்புள்ளது. குறிப்பாக வடக்கு மாகாணத்தின் மேற்கு பகுதிகள் சற்று கனமான மழையைப் பெறும் வாய்ப்புள்ளது” என்றார்

## மாவீரர் நாள் தொடர்பில் அவுஸ்திரேலிய செனட் சபையில் கருத்து



மாவீரர் நாள் என்பது தமிழர்களின் நாற் காட்டியில் மிகமுக்கியமான தொரு தினமாகும் என்று அவுஸ்திரேலிய செனெட் உறுப்பினர் டேவிட் ஷுபிரிட்ஜ் (David Shoebridge) தெரிவித்துள்ளார்.

தமிழர்களின்தியாகங்களைத் தாம் அங்கீகரிப்பதாகவும், கடந்த காலம் குறித்து நேர்மையாகப் பேசுவதற்குத் தயாராக இருப்பதாக வும் அவர் தெரிவித்துள்ளார்.

மாவீரர் நாளை நினைவுகூரும் வகையில் அவுஸ்திரேலிய செனெட் சபையில் உரையாற்றிய போதே டேவிட் ஷுபிரிட்ஜ் இவ்வாறு குறிப்பிட்டுள் ளார்.

‘மாவீரர் நாள்’ என்பது தமிழர்களின் நாற்காட்டியில் மிக முக்கியமானதொரு தினமாகும் எனச் சுட்டிக்காட்டிய அவர், உலக வாழ் தமிழர்கள் யுத்தத் தில் உயிரிழந்தோரை 27ஆம் திகதி நினைவுகூர்வதானது ஒருமைப் பாட்டின் மிகவலுவா னதொரு அடையாளமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று அவுஸ்திரேலியாவிலும், ஏனைய உலக நாடுகளிலும் வாழும் தமிழர் களு டன் தான் உடன் நிற்பதாகவும் டேவிட் ஷுபிரிட்ஜ் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## நைஜீரியவில் தொடர் தாக்குதல் – அவசர நிலை பிரகடனம்



நாடு முழுவதும் பயங்கரவாத தாக்குதல்கள் மற்றும் கடத்தல் சம்பவங்கள் கடுமையாக அதிகரித்ததை அடுத்து, நைஜீரிய ஜனாதிபதி போலா டினுபு புதன்கிழமை(26) “நாடு தழுவிய பாதுகாப்பு அவசரநிலையை அறிவித்துள்ளார். முன்னதாக பாதுகாப்பு நெருக்கடி காரணமாக சமீபத்தில் முடிவடைந்த ஜி20 உச்சிமாநாட்டிற் காக தென்னாபிரிக்காவிற்கு தனது திட்டமிடப்பட்ட பயணத்தை டினுபு ரத்து செய்திருந்தார்.

வளர்ந்து வரும் பாதுகாப்பு சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, நாடு தழுவிய பாதுகாப்பு அவசரநிலையை அறிவித்து, ஆயுதப் படைகளில் கூடுதல் ஆட்சேர்ப்புக்கு உத்தரவிட முடிவு செய்து, மேலும் 20,000 அதிகாரிகளை பணியமர்த்துமாறு அவர் காவல்துறைக்கு அறிவுறுத்தியுள்ளார். இதனால் திட்டமிடப் பட்ட புதிய ஆட்சேர்ப்புகளின் மொத்த எண்ணிக்கை 50,000 ஆக உயர்ந்தப்படும், மேலும் வன்முறையால் அதிகம் பாதிக்கப் பட்ட பகுதிகளுக்கு கூடுதல் பணி

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## காசாவின் பொருளாதாரம் முற்றாக அழிந்தது - ஐ.நா



இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான இரண்டு வருடப் போருக்குப் பிறகு காசா மிக மோசமான பொருளாதார சரிவைச் சந்தித்து வருவதாக ஐ.நா. வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மாநாட்டு (UNCTAD) அறிக்கை தெரிவித்துள் ளது.

ஐ.நா. வர்த்தக அமைப்பு இந்த வாரம் 2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி முந்தைய ஆண்டை விட 83% சரிந்ததாகவும், தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆண்டுக்கு $161 ஆகக் குறைந்துள்ளதாகவும் - ஒரு நாளைக்கு 50 சென்ட்டுகளுக்கும் குறைவாக - உலகின் மிகக் குறைந்த மட்டங்களில் ஒன்றாகும்.

பொருளாதாரம் அதன் 2022

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## சோமாலியாவில் அமெரிக்கா மேற்கொண்ட சிறப்பு படை நடவடிக்கை



அமெரிக்க சிறப்பு நடவடிக்கைப் படையினரும், பன்ட்லேண்ட் பயங்கரவாதஎதிர்ப்புப் படையினரும், பாலேட்பள்ளத் தாக்கில் உள்ள சோமாலிய ISIS மறைவிடங்கள் மீது கடந்த புதன் கிழமை(26) அதிகாலையில் தாக்குதல் நடத்தியுள்ளனர். 100க்கும் மேற்பட்ட அமெரிக்க சிறப்பு படையினர் MQ-9 ரீப்பர்களுடன் MH-60 ஹெலிகாப்டர்கள் மூலம் வந்து இறங்கி, கால் மிஸ்காட் மலைத்தொடரின் பாகுஜே மற்றும் மரீரோ பகுதிகளில் சுமார் 10 முதல் 15 ISIS போராளிகள் தங்கியிருந்த குகை நிலைகளைத் தாக்கினர்.

பல நாட்கள் அமெரிக்க வான்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## சூடானில் இருந்து தப்பியோடும் குழந்தைகள்



சூடானின் துணை ராணுவ விரைவு ஆதரவுப் படைகள் (RSF) கடந்த மாதம் எல்-ஃபாஷர் நகரத்தை கைப் பற்றியதிலிருந்து, சூடானின் மேற்கு டார்ஃபர் பிராந்தியத்தில் உள்ள தவிலா நகரத்திற்கு நூற்றுக் கணக்கான சூடான் குழந்தைகள் தங்கள் பெற்றோர் இல்லாமல் வந்துள்ளதாக ஒரு மனிதாபிமானக் குழு தெரிவித்துள்ளது.

குறைந்தது 400 பெற்றோர் இல்லாத குழந்தைகள் தவிலாவிற்கு வந்துள்ளனர், ஆனால் உண்மையான எண்ணிக்கை மிக அதிக மாக இருக்கலாம் என்று

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## தமிழ்த்தேசிய கட்சிகளின் ஒற்றுமையே... மாவீரர்களின் தியாகத்துக்கான மதிப்பு!

**பா. அரியநேத்திரன்**

*மாவீரர்களுக்கு வழமைபோன்று கடந்த 2025, கார்த்திகை,27, ல் தாயகத்திலும், புலம் பெயர் தேசங்களிலும்,மத்தியகிழக்குநாடுகளிலும் தீபச் சுடர்கள் ஏற்றி வணக்க நிகழ்வுகள் இடம்பெற்றன.*



*மண்ணில் ஆகுதியான வீரமறவர்களை நினைத்து தமிழினம் திரண்டு எந்த தடைகளும், கெடுபிடிகளும் இன்றி கடந்த 16, வருடங்களில் இம்முறை இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வை காணமுடிந்தது.*

*தமிழ்த்தேசிய கட்சிகள் ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டும் இனிமேலும் பிரிந்து சிதைந்து தமது அரசியல் செயல்பாடுகளை முன்னெடுப்பதை தவிர்த்து ஒன்றுபட்டு ஒற்றுமையாக வடகிழக்கு தமிழ்மக்களை தேசமாக திரட்டி அரசியல் தீர்வுக்காகவும், இனப்படு கொலைக்கான சர்வதேச நீதிக்காகவும் கூட்டாக ஒரு குரலில் வலியுறுத்துவதற்கான வேலைத்திட்டத்தை இந்த மாவீரர் தினத்தில் இருந்தாவது முன்னெடுக்க அணிதிரள வேண்டிய அவசியம் எல்லா தமிழ்தேசிய கட்சிகளுக்கும் உண்டு என்பதை புரிவது நல்லது.*

*2009, மே,18, க்கு முன்னரான காலப்பகுதியில் ஒற்றைத்தலைமைக்கு கீழ் ஒழுக்கமாக ஒற்றுமையாக முன்னெடுத்த கொள்கை அரசியல் இப்போது இல்லை. மாறுபட்ட கருத்துக்களால் சிதறி பத்து, பன்னிரண்டு தமிழ்தேசிய கட்சிகளாகவும், பல தலைவர்களாகவும் மாறிவிட்டது.*

*இப்போது இருக்கின்ற அனைத்து தமிழ்த்தேசிய கட்சிகளும் ஒவ்வொரு பெயரில் இயங்கினாலும் அனைத்தும் தனிநபர் கட்சிகளாகவே உள்ளன கூட்டுப் பொறுப்புடன் தீர்மானங்களை எடுக்க முடியாமல் முகஸ்துதிக்கும், சலுகைகளுக்கும், பணத்துக்கும், தலையாட்டுகின்ற நிலைப்பாடே சில கட்சிகளுடைய நிலைப்பாடாகவே கடந்த 16, வருடங்களாக இருந்துள் ளன.*

*ஒரு கட்சிக்குள்ளே இரண்டு அணிகள், ஒருவர் மற்றவரை குறைகூறுவது கட்சி உறுப்பினரை அதே கட்சி உறுப்பினர் அவமதித்தல் தூற்றுதல், காட்டிக் கொடுத்தல் என தமிழ்தேசிய சில தமிழ்த்தேசிய கட்சி களுக்குள் உள்ளக முரண்பாடுகள் தொடர்வதும், நிரந்தர தலைவர், நிரந்தர செயலாளர் இல்லாத பதில் பதவிகளுடன் காலத்தை கடத்தி தேர்தலுக்காக மட்டுமே கட்சி என்று இயங்குவதையும் பிரதான கட்சி எனப்படும் தமிழரசுக் கட்சியில் காணமுடிகிறது.*

*தேர்தலுக்காக கூட்டுச்சேர்வதை மட்டும் சிந்திக்கும் தமிழ்த்தேசிய கட்சிகள் கொள்கைக்காக கூட்டுச்சேர்வதை தவிர்த்து விமர்சனங்களை கூறி முரண் பாடுகளை வளர்க்கும் நிலைமை தொடர்ந்து கொண்டே உள்ளது.*

*மாவீரர்களை நினைத்து கார்த்திகை 27 துயிலும் இல்லங்களில் அவர்களின் கனவை நனவாக்குவோம் என நினைந்து தீபங்களை ஏற்றுவதும், மாவீர்ர்களின் நினைவு உரைகளை பொதுவெளிகளில் உரையாற்றும் போது அனைத்து தமிழ்த்தேசிய கட்சி தலைவர்கள் உறுப்பினர்கள் கூறுகின்ற ஒரே விடயம் " மாவீர் களுடைய கனவு நனவாக உழைப்போம்" அவர்களு டைய கனவு எது என்பது அனைவருக்கும் தெரியும் மாவீரர்களுடைய கனவில், செயலில் மிகவும் முக்கிய மாக இருந்தது அவர்களுடைய ஒற்றுமை என்பதையும் நாம் புரிந்து கொள்ளவேண்டும்.*

*மாவீரர்களுக்காக வணக்கம் செலுத்தும் நாம்*

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

**ஆசிரியர் தலையங்கம்**

இலக்கு

## மாவீரர் நாளில் தன்னாட்சி எழுச்சி கொண்டெழுந்தனர் இறைமையுள்ள ஈழத்தமிழர்

ஈழத்தமிழரின் தேசிய பிரச்சினையென்பது ஈழத்தமிழரின் இறைமையும் தன்னாதிக்கமுள்ள யாழ்ப்பாண – வன்னி அரசுக்களைக் கைப்பற்றித் தங்கள் வசமாக்கிய ஈழத்தமிழரின் இறைமையைக் காலனித்துவ பிரித்தானிய அரசாங்கத்திடமிருந்து மீட்பதற்கு 115 ஆண்டுகள் போராடி வந்த ஈழத்தமிழர்களிடம் அதனை ஒப்படைக்காது காலனித்துவத்தால் தீர்க்கப்படாத பிரச்சினையாக அனைத்துலக நாடுகளாலும் அமைப்புக்களாலும் தீர்க்கப்பட வேண்டிய அனைத்துலகப் பிரச்சினையாக 04.02.1948 இல் காலனித்துவப் பிரித்தானியாவே உருவாக்கிய ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமைக் குள் ஈழத்தமிழர்களின் இறைமையையும் உள்ளடக்கியதால் 77 ஆண்டுகளாகத் தொடரும் சிங்களப் பெரும்பான்மை ஆட்சியாளர்க ளின் ஈழத்தமிழர்கள் மேலான ஈழத்தமிழின அழிப்பு அரசியல் கொள்கைகளாலும் கோட்பாடுகளாலும் ஈழத்தமிழர்கள் தங்களின் தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்தித் தங்களின் பாதுகாப்பான அமைதியான வாழ்வையும் வளரச்சிகளையும் அடைய இயலாது தொடர்ந்து இனஅழிப்புக்கு உள்ளாகி வருதல் என்பதாகும்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இலங்கைத் தீவில் வாழ்ந்து வரும் தேசஇனமான ஈழத்தமிழர்கள் தாங்கள் பிரித்தானிய காலனித்துவத்திடம் இழந்த இறைமையை மீளப்பெறுவதற்காகவே அவ்வாறு தங்கள் இறைமையையும் இழந்த இலங்கைத் தீவின் மற்றொரு தேச இனமான சிங்களவர் களையும் இணைத்து பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்கு எதிராகப் போராடினர். ஆனால் பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் உருவாக்கிய சோல்பரி அரசியலமைப்பு ஈழத்தமிழர்களின் இறைமையை மீளவும் அவர்களிடம் நேரடியாகக் கையளிக்காது மதத்திற்கோ இனத்திற்கோ எதிரான சட்டங்களைச் சிலோன் பாராளுமன்றம் இயற்றினால் பிரித்தானிய பிரிவிக்கவுன்சிலுக்கு மேன்முறையீடு செய்து நீதி பெறலாமெனப் பிரித்தானிய முடிக்குரியவரையே ஈழத்தமிழர்களின் மீயுயர் இறைமையாளராகத் தொடர அரசியலமைப்பு உறுதியளிக்கும் சோல்பரி அரசியலமைப்பின் 29(2) பிரிவினைச் சிறுபான்மையினர்க்கான அரசியலமைப்புப் பாதுகாப்பாகக் கட்டமைத்துச் சுதந்திரத்தை சிலோனுக்கு வழங்கினர்.

04.02.1948 முதல் 22.05. 1972 வரை 24 ஆண்டுகள் ஈழத்தமிழர்கள் தாங்கள் பிரித்தானிய காலனித்துவ அரசிடம் இழந்த அரசியல் உரிமைகளை நவகாலனித்துவ அரசாகப் பிரித்தானிய அரசால் உருவாக்கப்பட்ட சிலோன் அரசாங்கத்திடம் இருந்து மீளப்பெறச் சகல சனநாயக வழிகளிலும் முயன்றும் இயலாத நிலையிலே 22.05. 1972இல் சிங்கள அரசாங்கம் சோல்பரி அரசியல் அமைப்பை வன்முறைப்படுத்தி கோடீஸ்வரன் வழக்கில் பிரித்தானியப் பிரிவுக் கவுன்சில் அளித்த தீர்ப்புக்குக் கட்டுப்பட மறுத்து அரசியலமைப்புச் சட்டத்திற்கும் நீதிமன்றச் சட்டத்திற்கும் எதிரான அனைத்துலகச் சட்ட விரோத சிங்கள பௌத்த குடியரசைப் பிரகடனப்படுத்தியது. இதனால் 1975இல் ஈழத்தமிழர்களின் அன்றைய அரசியல் தலைமையாக விளங்கிய தமிழரசுக்கட்சியின் தலைவரான சாமுவேல் வேலுப்பிள்ளை யேம்ஸ் செல்வநாயகம் அவர்கள் ஈழத்தமிழர்களை ஆட்சி செய்யும் உரிமையை இழந்து விட்ட சிறிலங்காவின் நாடாளுமன்றத்தின் உறுப்பினராக மீளவும் சத்தியப் பிரமாணம் செய்யாது ஈழத்தமிழரின் தன்னாட்சிப் பிரகடனத்தை அனைத்துலகச் சட்டங்களுக்கு அமைய சனநாயக முறையில் பிரகடனப்படுத்தினார். இந்த ஈழத்தமிழரின் தன்னாட்சிப் பிரகடனத்தின் 50 வது ஆண்டான 2025 இல் ஈழத்தமிழரின் நடைமுறையரசின் 146000 குடிமக்களை 18.05.2009இல் முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பு மூலம் தேசமாகவே இனஅழிப்பால் ஒடுக்கி அனைத்துலகச் சட்டங்களுக்கு எதிரான ஆக்கிரமிப்பு அரசாகக் கடந்து 16 ஆண்டுகளாகத் தொடரும் இன்றைய சிறிலங்கா ஆட்சியார்களுக்கு 2025ம் ஆண்டின் மாவீரர் நாளன்று காலநிலைச் சீர்கேடுகள் உயிராபத்தை ஏற்படுத்திய இயற்கைச்சூழலிலும் உயிரினும் மேலானது இனமானம் என்ற தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் அரசியல் நெறிப்படுத்தல் வழி தன்னாட்சி எழுச்சி வேட்கை கொண்டு தேசமாக எழுந்த வரலாற்று நிகழ்வு 27.11. 2025 இல் ஈழத்தமிழர் தாயகத்தில் நிகழ்ந்தமையை உலக வரலாறு பதிவு செய்துள்ளது.

மாவீரர் நாள் என்பதை இறந்தவர்களை நினைவுகூரும் நாளென்று சிறுமைப்படுத்தும் சிறிலங்கா அரசாங்கம் இறந்தவர்களை நினைவு கூரத் தடையில்லை ஆனால் தங்களால் இனஅழிப்புக்கும் உட்கட்டுமான இனத்துடைப்பு அழிப்புக்கும் பண்பாட்டு இனஅழிப்புக்கும் உள்ளாக்கப்பட்ட நடைமுறையரசின் அடையாளங்கள் எதுவும் இருக்கக் கூடாதென்று அறிவித்த அறிவிப்பை உடைத்து எறிந்து இறைமையுள்ள ஈழத்தமிழர்கள் மாவீரர்நாள் இறந்தவர்களாக யாரையும் பிரகடனப்படுத்தி அஞ்சலி செய்யும் நாளல்ல, மாவீரர் என்றால் மரணத்தை வென்றவர்கள் என்ற மாவீரர்க்கான வரைவிலக்கணத்தை நிறைவு செய்து அவர்கள் விட்டுச் சென்ற பணி தொடருவதற்கு வல்லமை தரும் ஈழத்தமிழர் தாயகத்தின் தேசிய நாள் என்ற உண்மையை உலகுக்கு உணர்த்திடவே மாவீரத் தீபம் ஏற்றப்படுகிறது என்பதை இவ்வாண்டு தாயகத்திலும் உலக இனமாகத் தாம் வாழும் உலக நாடுகளிலும் பல்லாயிரக் கணக்கில் திரண்டெழுந்து நிரூபித்து, ஏக்கிய ராஜ்ஜிய என்ற மகிந்த கோத்தபாய சிறிசேனரணில் அநுரகுமர சிந்தனையான ஈழத்தமிழர் இறைமை ஒடுக்கத்தை ஈழத்தமிழர்கள் ஏற்க மாட்டார்கள் என்பதைச் சிங்கள ஆட்சியாளர்களுக்கும் சிங்களவர்கள் ஒருமித்து வாழ மறுத்து இனஅழிப்புச் செய்வதே ஈழத்தமிழர்களின் தேசிய பிரச்சினை என்பதை மறந்து ஒருமித்த அரசு என்று மொழிபெயர்ப்பால் ஈழத்தமிழரை மயக்க முயலும் அனைவருக்கும் தெளிவாக்கியுள்ளனர்.

மேலும் சிறிலங்காவின் புதிய அரசியலமைப்பு ஈழத்தமிழர் தேசிய ஒடுக்கத்தை அனைவரும் சிறிலங்கன் என்ற சிங்கள பேரினவாத தேசிய சிந்தனையாக அரசியலமைப்பில் உறுதிப்படுத்தி அதன் பின்னர் ஈழத்தமிழர் என்று ஈழத்தமிழர்கள் தாங்கள் பேசினாலோ எழுதினாலோ அது அரசியலமைப்புக்கு எதிரான தேசத்துரோகக் குற்றமாக அறிவிக்கப்பட உள்ளதாக சில அரசியல் அவதானிகள் எச்சரிப்புச் செய்கின்றனர். இந்நிலையில் ஈழத்தமிழர் தன்னாட்சிப் பிரகடனத்தின் ஐம்பதாவது ஆண்டில் தன்னாட்சிக்காகத் தேசமாக ஈழத்தமிழர் தாயகத்தின் தேசிய நாளாம் மாவீரர் நாளில் தாயகத்திலும் உலகெங்கும் திரண் டெழுந்த ஈழத்தமிழர்கள் 2026 ஈழத்தமிழரின் வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்னும் ஈழத்தமிழரின் இறைமைப் பிரகடனத்தின் 50 வது ஆண்டாக அமைவதால் அந்த ஆண்டு முழுவதும் ஈழத்தமிழரின் இறைமையினை உலகுக்குத் தெளிவுபடுத்தும் அறிவூட்டலையும் ஈழத்தமிழரின் இறைமையை ஒடுக்கும் சிறிலங்காவுக்கு எதிரான சனநாயக மக்கள் போராட்டங்களையும் கட்டமைக்க வேண்டுமென்று மாவீரர் துயிலகங்கள் எங்கும் மக்களின் குரல் எழுந்துள்ளது என்பதை இலக்கு இவ்வாரத்தில் கவனப்படுத்த விரும்புகிறது.

**ஆசிரியர்**

கவிதை

# “வல்லமை தந்து எம்முள் வாழுமே மாவீரம்”



மண் நனைத்த குருதியும்
கடலணைத்த உயிர்களும்
வான் நிறைத்த கந்தக மண்டலத்தே
காற்றளந்த விடுதலைச் சுவடுகளும்
கார்த்திகை மாமழையாய் நிலம்
நனைத்து
நித்தியப் புகழ் பாடும் வல்ல மாவீரம்!

மண்ணை அணைத்து முத்தமிட்டவர்
காந்தள்ப் பூக்களாய்ப் பூத்திடவும்
கடல் தன்னில் தம்மை வித்திட்டோர்
அலைகளாய் வந்து தாய்மடி தழுவிடவும்
கார்த்திகை சிலிர்க்கும் கடுந்தவம்
மாவீரம்!

மண்ணையும் அண்ணனையும்
நேசித்து எண்ணக்கனவுகளில்
விடுதலை இசை பாடி விண்ணையே
சாடும் வீரம் விளையாட

உன்னையும், என்னையும்
நினைந்து தம்மைக் கொடைதந்த
வீரரின் விடுதலை மூச்சே வீரமாவீரம்!

கண்ணெனக் காத்த தமிழ்
மண்ணைத் தமையீந்தும்
திண்ணமாய்க் காத்தது மாவீரம்,
தண்ணொளி கொண்ட
தகமைத் தலைவனும்
தலைகுனிந்து வணங்கிப் போற்ற
உன்னதம் கொண்டது உத்தமர் மாவீரம்!

கன்னத்து வழியும் விழிநீர் துடைத்து
கனத்த மனதினிலே கனல் கொண்டு
எண்ணத்திலும், செயலிலும்
எம்முள்ளே நிறைந்திருந்து
வண்ணத் தேசமதன் ஆன்மாவாய்
வல்லமை தந்து வாழுமே புனிதமாவீரம்!

——— காந்தள்



கட்டுரை




# அமெரிக்க – இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் ஒரு பார்வை

**விதுரன்**

அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளைப் பலப்படுத்தும் விதமாக, இலங்கை–அமெரிக்கா பாதுகாப்பு புரிந்துணர்வு உடன்பாடு கடந்த நவம்பர் 14அன்று கொழும்பில் கையெழுத்தாகியுள்ளது.

ஆரம்பத்தில் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த இந்த உடன்பாடு, பொதுமக்களின் மற்றும் சிவில் சமூகக் குழுக்களின் கோரிக்கைக்கு இணங்க தற்போது குறித்த உடன்பாடு முழுமையாக பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.



இந்த புரிந்துணர்வு உடன்பாடானது, அமெரிக்காவின் அரச கூட்டுத்திட்டத்தின் கீழ் உத்தியோகபூர்வமாக மேம்படுத்தப்பட்ட பாது காப் புக்கட்டமைப்பை உருவாக்குகிறது. இதன் மூலம் இலங்கையின் ஆயுதப் படைகள், அமெரிக்காவின் மொன்டானா தேசிய காவல்படை மற்றும் அமெரிக்க கடலோரக் காவல்படை ஆகியவற்று டன் இணைந்து செயற்படுவதற்கு வழி சமைக்கிறது. இந்த உடன்படிக்கையில் அமெரிக்கா சார்பாக அமெரிக்க தூதுவர் ஜூலி சங் மற்றும் பிரிகேடியர் ஜெனரல் ட்ரென்டன் கிப்சன் ஆகியோரும் இலங்கை சார்பாக பாதுகாப்புச் செயலாளர் எயர் வைஸ் மார்ஷல் (ஓய்வு பெற்ற) சம்பத் துய கொந்தவும் கைச்சாத்திட்டுள்ளனர்.



குறித்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், இந்தியா மற்றும் சீனாவுடன் செய்யப்பட்ட பாதுகாப்பு உடன்பாடுகளை தொடர்ந்து, மற்றொரு முக்கியமான வெளிநாட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தமாக அமெரிக்காவுடனான உடன்பாடு காணப்படுகின்றது,

இந்நிலையில் தற்போது பாராளுமன்றின் ஊடாக வெளியிடப்பட்ட புரிந்துணர்வு உடன்பாடு, இரு நாடுகளுக்கிடையேயான விரிவானதொரு பரஸ்பர ஒத்துழைப்புக் கட்டமைப்பை வெளிப்படுத்துவதாக உள்ளது.

அத்துடன் குறித்த உடன்பாடானது 11 விடயங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. முதலாவதாக, விமான நடவடிக்கைகள், பராமரிப்பு மற்றும் பாதுகாப்பாகும். இது அமெரிக்க விமானப்படையின் செயல்பாடுகளை இலங்கைக்குள் விரிவுபடுத்துவதற்கும், தளவாட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் வழிவகுக்கும் முக்கியமான அம்சமாகும்.



இரண்டாவதாக, கடல்சார் கள விழிப்புணர்வாகும். இலங்கையின் புவிசார் மூலோபாய முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, சட்ட விரோத கடத்தல், ஒழுங்கற்ற குடியேற்றம் மற்றும் போதைப்பொருள் தடுப்பு போன்ற கடல்சார் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதில் கண்காணிப்பு மற்றும் பதிலளிப்பு திறன்களை வலுப்படுத்துவது ஒரு முக்கிய முன்னுரிமையாக உள்ளது.

மூன்றாவதாக, சைபர் பாதுகாப்பு மற்றும் தகவல் தொடர்பு பாதுகாப்பாகும். இந்த ஒத்துழைப்பு பரந்த தளங்களைக் கொண்டுள்ளதோடு இலங்கைக்குச் சாதகமான அம்சங்களைக் கொண்டு வருவதுடன், அமெரிக்காவுக்குத் தேவையான தகவல்களைப் பெறுவதற்கும் வழிவகுக்கும்.

நான்காவதாக, மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் அல்லது அவசரகால பதிலளிப்பாகும். இது காலநிலை சார்ந்த பேரிடர்களுக்கு இலங்கை ஆளாகும் தன்மையைக் கருத்தில் கொண்டு, வெள்ளம், நிலச்சரிவுகள் போன்ற இயற்கை அனர்த்தங்களின் போது இரு தரப்புப் படைகளுக்கும் இடையேயான ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கான கூட்டுப் பயிற்சிகள் திட்டமிடப்பட்டுள்ளன.

ஐந்தாவதாக தலைமைத்துவம் மற்றும் பணியாளர் மேம்பாட்டு விடயம் காணப்படுவதோடு ஆறாவதாக, இராணுவ மருத்துவம் மற்றும் பொறியியல் நடவடிக்கைகள் காணப்படுகின்றன. ஏழாவதாக செயற்பாட்டு தளபாடங்கள் மற்றும் அமைதிகாக்கும் நடவடிக்கைகள் உள்ளன. அமைதி காக்கும் நடவடிக்கைகளின் போது விநியோகத் தேவைகளுக்கு இலங்கையை அமெரிக்கா பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை இது உருவாக்குகிறது.

எட்டாவதாக இரசாயன, உயிரியல், கதிரியக்க, அணு விடயமும் ஒன்பதாகவதாக, சுற்றுச்சூழல் பாதுகாப்பும் பத்தாவதாக, கலாசார பரிமாற்ற திட்டங்களும் பதினொராவதாக, பரஸ்பரம் முடிவு செய்யப்படும் வேறேதும் பரப்புகளும் காணப்படுகின்றன.

இந்த உடன்பாடு செய்யப்பட்டதன் பின்னர், இலங்கையின் தேசிய பாதுகாப்பு முன்னுரிமைகளை சமரசம் செய்யாமல், அதன் திறன்களை பலப்படுத்தும் ‘முன்னோக்குச் சிந்தனையுள்ள’ கூட்டுறவாக இருக்கின்றது என்று பாதுகாப்புச்செயலாளர் சம்பத் துயகொந்த குறிப்பிட்டுள்ளார்.

இப்புரிந்துணர்வு உடன்பாடு சட்டப்பூர்வமாக காணப்படாத விடயமாக இருக்கின்றபோதும் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும். ஐந்து ஆண்டுகளின் பின்னர் உடன்பாட்டில் பங்கேற்ற தரப்பினர் விலகாது விட்டால் அது மீண்டும் புதிப்பிக்கப்படும்.

இந்த உடன்பாடு கையெழுத்திடப்பட்டமையானது சில கேள்விகளை எழுப்புவதற்கு வழிசமைப்பதாக உள்ளது. முதலாவதாக, அமெரிக்கப் படைகளை நிலை நிறுவத்துவது தொடர்பான உடன்பாடான ‘சோபா’வுக்குள் பிரவேசிப்பதற்கான ஒரு திறவுகோலாக இருக்குமா என்ற சந்தேகத்தையும், நாட்டின் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களை அமெரிக்கா தனது தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் சூழலை ஏற்படுத்துமா என்ற கேள்விகளையும் உருவாக்கியுள்ளது.

சோபா ஒப்பந்தம், அமெரிக்கப் படைகளுக்கும் சிவிலியன் பணியாளர்களுக்கும் இராஜதந்திர சலுகைகளுக்கு நிகரான ‘சிறப்புரிமைகள், விலக்குகள் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அது இலங்கையின் தேசிய இறையாண்மைக்கு எதிரானது என்று அப்போது எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்து கூறியது தற்போதைய ஆட்சியாளர்கள் தான். அந்த வகையில் குறித்த ஒப்பந்தம் பற்றி தென்னிலங்கை மக்களிடையே சந்தேகங்கள் வலுத்து வருகின்றன.



இரண்டாவதாக, இந்த உடன்பாடு கையெழுத்தானமைக்கு, இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் காணப்பட்ட தற்போதைய நெருக்கமான உறவுகளின் பின்னணியில் நிகழ்ந்துள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது, இலங்கை பொருட்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி விதித்த 44சதவீத வரி, சமீபத்தில் 20சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த வரி குறைப்பானது, பாதுகாப்பு உடன்பாட்டைச் செய்துகொள்ள இணங்கியதால் கிடைத்ததா என்ற மர்ம முடிச்சு இன்னமும் அவிழ்க்கப்படவில்லை.

இதேநேரம், இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் வளர்ந்து வரும் செல்வாக்கைக் கட்டுப்படுத்துவதற்கான பரந்த அமெரிக்க மூலோபாயத்தில், காணப்படுகின்ற நிலையில் அவற்றுக்கு செயல் வடிவம் கொடுப்பதாக இருந்தால் கேந்திர ஸ்தானத்தில் உள்ள இலங்கையின் வலுவாக காலூன்றுவது அவசியமாகின்றது.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# சீரற்ற கால நிலையால் மக்களின் இயல்பு நிலை பாதிப்பு



நாட்டில் ஏற்பட்ட சீரற்ற கால நிலையால் வடகிழக்கு உள்ளிட்ட பல்வேறு மாகாணங்களும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மக்களின் இயல்பு நிலையும் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அன்றாடம் தினக் கூலித் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மீனவர்கள் மறு அறிவித்தல் வரை கடலுக்கு செல்ல வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. நெற் செய்கை விவசாய நிலங்கள் கிழக்கு மாகாணத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. தற்போது ஏற்பட்டுள்ள “திட்வா” புயல் மற்றும் கனமழை,மண்சரிவு,வெள்ளம் போன்ற இயற்கை பேரிடர்கள்பெரிதும்பாதிப்பைஏற்படுத்தியுள்ளது. 1984ம் ஆண்டின் பின் ஏற்பட்ட பாரிய பேரிடராக இது காணப்படுகிறது.

இவ்வாறான நிலையில் நிலவும் சீரற்ற வானிலைகாரணமாகஏற்பட்டஅனர்த்தங்களினால் 56 பேர்உயிரிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

மேலும் 21 பேர் காணாமல் போயுள்ளதாகவும் 14 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 16 ஆம் திகதி முதல் இன்று (2811.2025) வரை 56 பேர் உயிரிழந்துள்ள நிலையில், அவற்றில் 26 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 30 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகமாக, பதுளை மாவட்டத்தில் 21 பேர் உயிரிழந்துள்ளதுடன் ஏழு பேர் காணாமல் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



கிழக்கு மாகாண திருகோணமலை, மட்டக்களப்பு,அம்பாறை போன்ற மாவட்டங்களில் விவசாயம்,மீன் பிடி,கால் நடை வளர்ப்பு துறைகளை அதிகமாக தொழில்களாக கொண்டவர்களே காணப்படுகிறார்கள்.



நுவரெலியா மாவட்டத்தில் நால்வரும் ,அம்பாறை மாவட்டத்தில் ஏழு பேரும் ,கேகாலை மாவட்டத்தில் ஏழு பேரும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனர்த்தங்களினால் 20 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மொத்தமாக 12513 குடும்பங்களைச் சேர்ந்த 43991 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்தங்களினால் 4 வீடுகள் முழுமையாகவும், 666 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களில் 922 குடும்பங்களைச் சேர்ந்த 2443 பேர் பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 137 குடும்பங்களைச் சேர்ந்த 477 பேர் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளதாக


**கிண்ணியான்**

வும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.



திருகோணமலை மாவட்டத்தில் இன்று (28.11.2025) 12.00 pm தகவலின் படி 11 பிரதேச செயலகப் பிரிவின் 124 கிராம சேவகர் பிரிவுகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மொத்தமாக 5495 குடும்பங்களை சேர்ந்த 16222 பேர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 09 இடைத் தங்கல் முகாம்களில் 270 குடும்பங்களை சேர்ந்த 755 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாண முஸ்லீம் பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளதோடு உயர்தரப் பரீட்சை நடைபெற்று வரும் நிலையில் 27-29 வரையில் இடம் பெறவுள்ள பரீட்சை திகதிகள் ஒத்தி வைக்கப்பட்டு டிசம்பர் 07,08,09 ம் திகதிகளில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.



திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தாழ் நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் வயல் நிலங்களும் வெள்ள நீரினால் மூழ்கடிக்கப்பட்டு ஒரு சில இடங்களில் தரைவழிப் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக சமைத்த உணவுகளை வழங்கவும் நிவாரணங்கள்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# தமிழர் தாயகத்தில் தொடரும் தொல்பொருள் வன்முறை!

பா. அரியநேத்திரன்

இலங்கையில் தொல்பொருள் திணைக்களம் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் 1890ஆம் ஆண்டு நிறுவப்பட்டு 1940 ஆம் ஆண்டில், 9 ஆம் இலக்க தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் மூலம் இது சட்டப்பூர்வமாக்கப்பட்டது




தொல்பொருளியல் மரபுரிமை தொடர்பான சரியான முகாமைத்துவத்தை வளர்த்தெடுப்பது இலங்கைத் தொல்பொருளியல் திணைக்களத்தின் முதன்மை நோக்கம். இதனால், இலங்கையின் தொல்லியல் மரபுரிமையை முகாமைப்படுத்துவதையும் அது தொடர்பான செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதையும் இத்திணைக்களம் முக்கிய பணியாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது

தொல்பொருளியல் மரபுரிமை தொடர்பில், தேவையான மனித வளங்களையும், நிறுவன வளங்களையும் உருவாக்கிப் பேணுதல்; நாடு முழுவதிலும் உள்ள தொல்லியல் மரபுரிமைகளைப் பாதுகாத்தல்; அவற்றைப் பதிவு செய்தல், இம்மரபுரிமை தொடர்பாக மக்களிடையே அறிவை வளர்த்தல் தொல்லியல் களங்களையும், நினைவுச்சின்னங்களையும், தொல்பொருட்களையும் பேணிப் பாதுகாத்தல்; தொடர்பான ஆய்வுகளில் ஈடுபடுதல் என்பன இத்திணைக்களத்தின் செயற்பாட்டு வரம்புக்குள் அடங்குகின்றன.



இவ்வாறான நோக்கமாக பொதுவாக கூறப்பட்டாலும் வடகிழக்கை பொறுத்தவரை பௌத்தமதத்தையும் பௌத்த சின்னங்களையும் ஆய்வு செய்து விகாரைகளையும், புத்தர் சிலைகளையும் அமைப்பதற்கான பௌத்த மத திணைக்களமாகவே தொல்பொருள் திணைக்களம் செயல்படுகிறது என்ற அச்சம் வடகிழக்கு தமிழர்கள் மத்தியில் உண்டு.

2009,மே,18,க்கு பிறகான சூழலில் ஒரு கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை மாறி மாறி ஆட்சி செய்த சிங்கள அரசுகள் நடத்தி வருகின்றன.

### தொல்பொருளியல் வன்முறை

இலங்கை அரசின் ஒரு பாகமாக இருக்கும் தொல்பொருளியல் திணைக்களம், இலங்கையினைச் சிங்கள பௌத்தர்களுக்குரிய ஒரு தேசமாக உருவாக்கும் முயற்சிகளுக்கு பங்களிப்புச் செய்து வருகிறது. எமது பாடசாலைகளிலே கற்பிக்கப்படும் வரலாற்றுப் பாடநூல்கள் எவ்வாறு நாட்டின் சிறுபான்மை இன மக்களின் வரலாறுகளை இருட்டடிப்புச் செய்கின்றனவோ, அதே போலவே தொல்பொருளியல் திணைக்களமும் சிறுபான்மை மக்களிற்கும், இந்தத் தீவுக்கும் இடையிலான வரலாற்று ரீதியிலான உறவுகளை நீர்த்துப் போகச் செய்யும் பணிகளிலே ஈடுபடுகிறது. தொல்பொருளியல் துறையினைப் பயன்படுத்தி, இவ்வாறு திட்டமிட்ட முறையிலே, அரசினால் மேற்கொள்ளப்படுகிறது.

வடகிழக்கு மாகாணங்களில் இருந்து தமிழ்த் தேசிய அடையாளத்தின் மூலமான ஒரு சுயநிர்ணய உரிமைக்கான குரல் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில், இந்தப் பிரதேசத்தினை சிங்கள பௌத்த மயமாக்குவதன் மூலம், இப்பிராந்தியத்தின் சுயநிர்ணய உரிமைக்கான கோசங்களைவலுவிழக்கச்செய்யலாம் என்பதுவும் தொல்பொருளியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் வன்முறைக்கு மற்றொரு காரணம் ஆகும்.

### தொல்பொருளியல் செயலணி

இவ்வாறான ஒரு சூழமைவிலேயே, கிழக்கு மாகாணத்தில் இருக்கும் தொல்பொருளியல் முக்கியத்துவம் மிக்க இடங்களை முகாமை செய்வதற்கான ஒரு செயலணியின் நியமனம் ஜனாதிபதியினால் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலமாக அண்மையிலே வெளியிடப்பட்டது. ஒப்பீட்டளவில் நோக்குகையில் இலங்கையிலே இன, மதப் பல்வகைமை மிகவும் கூடிய மாகாணமாகக் கிழக்கு மாகாணம் அமைகின்றது.



கிட்டத்தட்ட 77% ஆன தமிழ் பேசும் மக்களை உள்ளடக்கிய ஒரு மாகாணத்தின் தொல்பொருள் முக்கியத்துவம் மிக்க இடங்களைப் பேணும் நோக்கத்துக்காக அமைக்கப்பட்டிருக்கும் ஒரு செயலணியிலே தமிழ் பேசும் சமூகங்களைச் சேர்ந்த ஒருவர் தன்னும் இடம்பெறாமை, கிழக்கில் வாழும் தமிழ்,முஸ்லிம் மக்களின் மத்தியில் இந்தச் செயலணி தொடர்பாக அச்ச உணர்வுகளைத் தோற்றுவித்துள்ளது. தமது சமூகங்களின் கலாசாரங்களையும், மதச் சின்னங்களையும், ஏன் தம் அடையாளம் சார் இருப்பினையும் தகர்க்கும் வகையிலேயே, இந்தச் செயலணி செயற்படக் கூடும் என்ற அச்சம் அவர்களைச் சூழ்ந்துள்ளது.

இந்தச் சூழலிலேயே இந்த இரண்டு சமூகங்களும் இணைந்து செயற்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்துப் பலரும் வலியுறுத்தி வருகின்றனர். இந்த இரண்டு சமூகங்களும் இணைந்து செயற்படுவதற்கு எவ்வாறான அரசியல் முயற்சிகள் அவசியம் என்பதனையும், அரசின் குறுகிய தேசியவாத ரீதியிலான தொல்பொருளியல் பார்வைக்கு மாற்றாக, இந்தப் பிரதேசத்திற்கென எவ்வாறான மாற்று அரசியற் பார்வை ஒன்று தேவைப்படுகிறது என்பதனையும் ஆராய்வதே இந்தக் கட்டுரையின் முக்கிய நோக்கம் ஆகும்.

இந்தச் சூழலில் வடக்கு கிழக்கு எங்கும் பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பானது பெருமெடுப்பில் நிகழ்த்தப்படுகின்றது.

கடந்த பொருளாதார நெருக்கடி காலத்தில் அந்த ஆக்கிரமிப்பை தற்காலிகமாக நிறுத்தி தமிழ் மக்களுடன் ஒன்றித்து போராட்டங்களை செய்து உலக நாடுகளின் கடன்களை பெற்றுக் கொள்ளும் வரை வாழாதிருந்த பௌத்த சிங்கள பேரினவாதம் இன்று தன்னுடைய முகத்தை மிகத் தெளிவாக வெளிக்காட்டி இருக்கின்றது.

திரிக்கப்பட்ட தொல்பொருள் ஆய்வு முடிவுகளை வெளியிடுவதன் மூலம் வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகம் என்ற கோட்பாட்டைச் சிதைப்பதே பேரினவாதத்தின் முதன்மை நோக்கமாக இருப்பதாக தமிழ் சிவில் சமூக அமையம் அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையில், தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கில் இவ்வாறான விஞ்ஞான பூர்வமற்ற, திரிக்கப்பட்ட தொல்பொருள் ஆய்வு முடிவுகளை வெளியிடுவதன் மூலம் வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகம் என்ற கோட்பாட்டைச் சிங்கள-பௌத்த பேரினவாதம் சிதைத்து வருகின்றது.

சிங்கள-பௌத்த மயமாக்கல் மூலமாக சிங்கள-பௌத்தர்களின் பாரம்பரிய வாழிடமாக வடக்கு-கிழக்கைக் மாற்றியமைத்து, தமிழர் தாயகத்தை ஆக்கிரமிப்பதே சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் முதன்மை நோக்காக இருந்து வருகின்றது.

அரசின் அனுசரணையிலான விவசாயக் குடியேற்றத்திட்டங்கள் போலவே தமிழர் பகுதிகளில் இவ்வாறு பௌத்த தொல் பொருட் சின்னங்களைக் கண்டடைவது என்பதுவும், தமிழர்களின்தாயகத்தைச்சிங்களக்குடியேற்றங்கள் மூலம் ஆக்கிரமிப்பதற்கான முதற்படியாக எப்போதும் இருந்து வருகின்றமையே இவ்வாறான நடவடிக்கைகள் தமிழ் மக்கள் மத்தியில் தமது இருப்புத் தொடர்பான அச்சத்தை ஏற்படுத்த காரணமாகின்றது.



தொல்லியல் எனும் போது அது இந்து, பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் இடங்களாக இருக்கலாம். ஆனால் கடந்த காலங்களில் தொல்லியல் எனும்போது அவை பௌத்த கலாச்சாரத்திற்கான இடம்போன்று காட்டுகின்றனர். அம்பிட்டிய சுமனரத்ன தேரர் என்ற ஒருவர் அடாவடிகளில் ஈடுபடுகின்றார்.

தற்போது அவர் கைது செய்யப்பட உள்ளதாக கூறப்பட்டாலும் கடந்த காலங்களில் அவர் நீதிமன்றில் பல வழக்குகளில் உள்ளார் கைது செய்யப்பட்டாலும் வெளியில் அவர் வந்த சந்தர்ப்பங்கள் பல உண்டு அவர் கெட்ட வார்த்தைகளை பேசி இன நல்லிணக்கத்தை குழப்புகின்றவர் இவ்வாறானவர்களின் தலையீடுகள் தொல்லியல் விடயங்களில் இருக்கும் போது இன நல்லிணக்கம் என அநுர அரசு கூறினால் "நாம் இலங்கையர்" என்ற நாடகம் காட்டினாலும் அது இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தப்போவதில்லை என்பதே உண்மை.

• • •

# தமிழ் பௌத்தம் சிங்களப் பேரினவாதத்தின் கோரப்பிடியிலிருந்து தமிழரைக் காக்கும் தீர்வாகுமா?

**முதலில் உங்களைப் பற்றி சுருக்கமாக அறிமுகப் படுத்திக்கொள்ளலாமா? திருகோணமலைப் போராட்டத்தில் நீங்கள் ஏன் இவ்வளவு தீவிரமாக ஈடுபட வேண்டிய நிலைமையிலிருப்பதாக உணருகிறீர்கள்?**

நான் திருமதி அருஷா அருள்தாஸ் ஜெயராஜா. நான் திருகோணமலையில் வசிக்கிறேன். ஒரு முன்பள்ளி ஆசிரியர் மற்றும் அதிபர், மேலும் இரண்டு புத்தகங்கள் எழுதியிருக்கிறேன். அவற்றில் ஒன்று, திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியின் தாபகர் அன்னை தங்கம்மா சண்முகம் பிள்ளையின் வாழ்க்கை வரலாற்று நூல். மற்றொன்று, திருக்கோணேஸ்வரர் ஆலய வரலாற்றை வினா–விடை வடிவில் தொகுத்து குழந்தைகளுக்காக வெளியிட்ட நூல். இந்தப் புத்தகங்களைப் போட்டிகள், பரீட்சைகள் மூலம் ஆயிரம் குழந்தைகளிடம் கொண்டு சென்று, ஆலயம் பற்றிய புரிதலை அடுத்த தலைமுறைக்கு பரப்ப முயன்றேன்.

நான் ஒரு சாதாரணத் தாயும் கூட – எனக்கு இரண்டு குழந்தைகள், கணவர் வெளிநாட்டில் வேலை செய்கிறார். ஆனாலும், திருகோணமலையில் தமிழர்களுக்கு நடக்கும் அநீதிகளை நேரில் பார்த்தவள் என்பதாலேயே, "நம்ம பிரச்சினையை நாமே சொல்லாமல் போனால், யாரும் வந்து சொல்லமாட்டார்கள்" என்ற உணர்ச்சி என்னை சமூகப் பொறுப்புக்கு தள்ளி வைத்திருக்கிறது.

**திருகோணமலையில் சமீபத்தில் புத்தர் சிலை நிறுவப்பட்ட சம்பவம் பற்றி நாடு முழுவதும் விவாதம் நடந்தது. அந்த சம்பவத்தின் உண்மையான பின்னணி என்ன?**

இது ஒரு தனிமையான மதச் செயலாகவே பார்க்க முடியாது. இது அரசாங்க நடவடிக்கைகள், மாநில அதிகாரிகள், பௌத்த பிக்குகள், இனவாத அரசியல் சக்திகள் – இவை எல்லாம் கலந்திருக்கும் ஒரு திட்டமிட்ட முயற்சி.


புதிய அரசாங்கம் வந்தபிறகு, "அனுமதி இல்லாத கட்டிடங்களை அகற்றுதல்" என்ற பெயரில் கடற்கரைப் பகுதிகள் பார்க்கப்பட்டன. கடற்கரை பாதுகாப்பு திணைக்களம், நகரசபை, நீதிமன்றம் – பல நிலையங்களில் கலந்தாய்வுகள் நடந்தன. அந்தக் கடற்கரையில் நீண்டகாலமாக ஒரு கடை இருந்தது. அது அரச நிலத்தின் மீது, முறையான அனுமதி இல்லாத கட்டடம் என்பதால், அதை அகற்ற உத்தரவு வந்தது.

அந்தக் கடை உரிமையாளருடன் நெருக்கமான பிக்கு ஒருவர், தங்களுக்கு 1951ஆம் ஆண்டிலிருந்தே அங்கே "தம்மபாசலா இருந்தது", பின்னர் சுனாமியால் அழிந்தது, தாங்கள் வேறு இடத்தில் தங்கியுள்ளனர் போன்ற பல கதைகளை உருவாக்கி, நேரம் கேட்டு வந்தார். மேலும், 2013–14 காலத்தில் புத்தசாசன அமைச்சின் மூலம் காணி ஒதுக்கீடு கிடைத்தது என்று கூறியும் கதை உருவாக்கப்பட்டது.

காரணம் தெளிவு: கடையை அகற்றக் காலக்கெடு முடியும் முன்பே, சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் பயன்படுத்தி, இரவில் திடீரென புத்தர் சிலை கொண்டு வந்து வைத்தனர். இங்குள்ள மக்கள் சொல்வது ஒன்று: "ஒரு முறை புத்தர் சிலை வந்துவிட்டால், அதை யாராலும் அகற்ற முடியாது"

அந்த நம்பிக்கையை அரசியல் ஆயுதமாக்கி, ஒரு சாதாரண கடையை காப்பாற்றும் பெயரில், முழு கடற்கரைப் பகுதியையும் பௌத்த மதச் சேத்ரம் எனக் குறிக்கும் வகையில் சிலை நிறுவப்பட்டது.

**இலங்கையில் சில பௌத்த பிக்குகள் மிகவும் ரவுடித் தனமாக நடந்து கொள்கிறார்கள், காவல்துறையே பயப்படுவது போல, திருகோணமலைச் சம்பவத்திலும் அப்படியா? இவர்கள் நடத்தை குறித்து உங்கள் பார்வை என்ன?**



**உயிரோடைத் தமிழ் வானொலிக்கு அருஷா அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதி களை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

வருத்தமுடனேயே சொல்ல வேண்டும் – இலங்கையில் பல பௌத்த பிக்குகள் ஆன்மீகத் துறவிகளாக இல்லை; அரசியல் ரவுடிகள் போல நடந்து கொள்கிறார்கள்.

ஒரு சம்பவம்: ஒரு பிக்கு, காவல் அதிகாரியை நேரடியாக தாக்கி அடித்தார். அந்தக் காட்சிகள் உலகம் முழுவதும் வீடியோவாகப் பரவின. இருந்தாலும், அந்தப் பிக்குக்கு எந்தச் சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. காரணம்:

- அவர்களைச் சுற்றி அரசியல் பாதுகாப்பு உள்ளது
- காவல்துறைப் பொறுப்பாளர்களுக்கும் அவர்களைத் தொட நேருக்கு நேராக பயம் உள்ளது.

இதனால், பௌத்த வேஷமிட்ட இனவாதிகள், நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் மீறி தாங்களே தலைவர்களைப் போல நடந்து கொள்கிறார்கள். பிக்குகள் "தெருச் சட்டம்" போட, அரசு அதிகாரிகளும் குனிந்து நிற்கும் நிலைமை உருவாகியுள்ளது.

**இந்த விவகாரம் நீதிமன்றத்திற்கு சென்றுள்ளது. இலங்கை நீதித்துறை அமைப்பின் பின்னணியைக் கருத்தில் கொள்ளும் போது, நீதி கிடைக்கும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?**

நேர்மையாகச் சொன்னால், நம்பிக்கை மிகவும் குறைவு. ஏற்கனவே நாம் அனுபவித்துள்ளோம் –

- நீதிபதி சரவணராஜா-குறுந்தூர்மலை வழக்கில் நேர்மையான தீர்ப்பளித்த பிறகு, உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாடு விட்டு வெளியேற வேண்டிய நிலை
- நீதிபதி இளஞ்செழியன் – தனக்குச் செய்யப்பட்ட அநீதியைப் பற்றி திறம்பட பேச வேண்டிய கட்டாயம் இவை எல்லாம் இலங்கை நீதித்துறை அரசியல் அழுத்தத்தில் சிக்கிக் கிடக்கிறது என்பதைச் சொல்கின்றன. அப்படியிருக்க, புத்தர் சிலை விவகாரத்தில், வழக்கை நீதிமன்றத்துக்கு இழுத்துச் சென்று, "இது நீதிமன்றத்தில் விசாரணை, ஆகவே இதைப் பற்றி பேசக் கூடாது" என்ற சூழலை உருவாக்கி,
- அமைதியாக ஒரு சமரச முடிவை எடுத்து, இதை மூடி விடும் அபாயம் இருக்கிறது.

அதாவது, வழக்குத் தொடர்வதன் மூலம் சம்பவத்தை முடக்கி வைப்பதே நோக்கமாக இருக்கலாம். உண்மையான நீதி கிடைப்பதற்கான வாய்ப்பு மிகச் சுருங்கியது.

**"தமிழ் பௌத்தம்" பற்றி நீங்கள் மீண்டும் மீண்டும் குறிப்பிடுகிறீர்கள். அது என்ன? ஏன் அதை மீட்டெடுக்க வேண்டும் என்று நீங்கள் வலியுறுத்துகிறீர்கள்?**

இன்று நாம் பார்க்கும் "சிங்கள பௌத்தம்" என்பது, பெரும்பாலும் பேரினவாத அரசியலின் ஆடை. ஆனால், பௌத்த மதம் தமிழ் மண்ணில் இருந்த வரலாறு நமக்கு மறக்கப்பட்டு விட்டது.

- மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்களில் "தமிழ் பௌத்தம்" குறித்து தெளிவான குறிப்புகள் இருக்கின்றன.
- ராஜராஜ சோழர் காலத்தில் திருகோணமலை அருகே இருந்த "ராஜராஜ தம்ம பள்ளி" (இன்று "வெல்கம் விகாரை" என்று அழைக்கப்படும் இடம்) என்பது, தமிழ் பௌத்தர்களுக்காக கட்டிய பாடசாலை. பின்னாளில் அது முழுவதும் சிங்களப் பௌத்த விகாரையாக மாற்றப்பட்டு விட்டது.
- யாழ்ப்பாணம், கந்தரோடை (இப்போது "கதிரகம" போல் மாற்றம் செய்யப்பட்ட இடப் பெயர்கள்), கன்னியா போன்ற இடங்களில் தமிழ் பௌத்த சமாதிகளும் நினைவுச் சின்னங்களும் இருந்தன. இவை அனைத்தையும் இன்று "சிங்கள பௌத்த பாரம்பரியம்" என்றே உலகுக்கு காட்டுகிறார்கள்.

இதில் முக்கியமான கருத்து: நாமே பௌத்தத்தை முதலில் ஏற்றுக் கொண்டோம்; பிறகு அதை மறந்துவிட்டோம்; அதே ஆயுதத்தை இப்போது சிங்கள பேரினவாதம் எங்களை அடக்க பயன்படுத்துகிறது.

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

**தமிழ் பௌத்தம் ... தொடர்ச்சி ...**

அதனால் தான் நான் சொல்கிறேன்: தமிழ் பௌத்தத்தை நாமே மீண்டும் உரிமையுடன் ஏற்றுக் கொண்டால்,

- தமிழ் பௌத்த துறவிகள் உருவானால்,
- "இந்த நிலம் எங்களுடைய புராதன பௌத்தத் தளம்" என்ற பொய்க்கதைக்கு மாற்றாக, நாமே ஆதாரத்தோடு பேச முடியும்.

இன்றைய கேள்வி: "தமிழ் பௌத்தம்" பற்றி பேச நாமே வெட்கப்படுகிறோமா?

அது நடுநிலை உண்மை; ஆனால் நாம் அதை மறந்தபோது, மற்றவர்கள் அதை ஆயுதமாக்கிக் கொண்டார்கள்.

**இன்று தமிழர்கள் மீதான மத அழுத்தம் பௌத்தம் மட்டும் அல்ல, கிறிஸ்தவம், இஸ்லாம் வழியாகவும் நடக்கிறது என்று சிலர் கூறுகிறார்கள். உங்கள் அனுபவம்?**

அது நிஜம். தமிழ் மக்கள் மீது மதமாற்று அழுத்தம் பழையதல்ல; வடிவம் மட்டும் மாறுகிறது.

- சில இடங்களில் கிறிஸ்தவ சமய மாற்றம்,
- சில இடங்களில் இஸ்லாமிய ஆன்மீக மையங்கள்,
- சில இடங்களில் பௌத்த விகாரைகள் –

இவை அனைத்தும் "மக்களுக்கு உதவுகிறோம், கல்வி தருகிறோம், சுகாதாரம் தருகிறோம்" என்ற பெயரில் தமிழரைப் பிடித்து இழுக்க முயல்கின்றன.

சில கிறிஸ்தவ தேவாலயங்களில் நடக்கும் நகைச் சுவைமயமான ஷோக்கள், அதேபோல சில பௌத்த தேரர்களின் தெரு அரசியல் – இவை அனைத்தும் மதத்தின் அறிவு சார்ந்த பகுதியை விட, கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் பகுதியை முன்னிறுத்துகின்றன.

அதனால், "பௌத்தம் மட்டும் எங்கள் எதிரி" என்று சொல்லிவிட்டு மற்ற மத அழுத் தங்களைப் பார்க்காமல் இருக்க முடியாது. முக்கிய பாடம். தமிழ் அடையாளத்தை, தமிழரின் சுய சிந்தனை சக்தியை எந்த மதமோ அரசியலோ முழுமையாக விழுங்கக் கூடாது.

**திருகோணமலையில் தமிழ்–இஸ்லாமிய மக்களின் உறவு எப்படி இருக்கிறது? பௌத்த சிலை போராட்டத்தில் முஸ்லிம் மக்கள் சேர்ந்து நின்றார்களா?**

சில முஸ்லிம் சகோதரர்கள் அன்றைய போராட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர். அவர்களையும் தாக்க முயற்சித்தார்கள் என்ற தகவல்கள் இருக்கின்றன. ஆனால் அந்தக் காட்சிகள் அனைத்தும் வெளியில் வரவில்லை. பெரிய கேள்வி – தமிழ்–முஸ்லிம் உறவு எப்படித் தான் இருக்கிறது?

என் பார்வையில்: "ஒரு குடும்பத்தில் அக்கா–தங்கை, மாமியார்–மருமகள் சண்டை மாதிரி; சில சமயம் சண்டை வரும், ஆனால் உறவு முற்றிலும் உடைந்துவிடாது." உண்மையில்:

- ஒற்றுமையாக வாழ வேண்டிய மக்களுக் கிடையில்,
- சில தனிப்பட்ட சம்பவங்களை மத நிறம் பூசி,
- பெரிய மதவாதப் பிரச்சனையாக மாற்ற முயற்சிப்பவர்கள் அதிகம்.

நான் சொந்த அனுபவத்தில் கண்டேன் – ஒரு பள்ளியில் சாரி அணிந்து பணிபுரிந்த ஆசிரியர்கள் திடீரென்று அபாயா அணிய வேண்டும், இல்லையெனில் வேலை செய்ய முடியாது என்ற இடத்திலிருந்து பெரிய மத மோதல் உருவாகியது. அங்கே நான் பேச வேண்டிய சூழல் வந்தபிறகு, "இங்கு வாழப் போனால் பயந்து ஒழிந்து போனால் கூடாது; துணிந்து பேசுவதே எங்கள் கடமை" என்ற எண்ணமே என்னை பொதுவாழ்வில் அதிகமாக ஈடுபட வைத்தது.

மொத்தத்தில், தமிழ்–முஸ்லிம் உறவு அடிப் படையில் நன்றாக இருக்கிறது, ஆனால் மதவாத சக்திகள் வந்தால் தீ மூட்டுகின்றன.

**திருகோணமலையில் தமிழ் அரசியல் தலைமையின் நிலைமை குறித்து நீங்கள் கடுமையாக விமர்சிக் கிறீர்கள், ஏன்?**

இது ஒருவரை குற்றம்சாட்டும் தனிப்பட்ட விமர்சனம் அல்ல; முழு தலைமுறையைப் பற்றிய வேதனை.

என் அனுபவத்தில்:

- ஒரு நல்ல பள்ளி அதிபர், தன் பின் வரும் அதிபரை தயாராகப் படைக்கிறார்;
- தன் அனுபவங்களை பகிர்ந்து, பொறுப்பு களைப் பகிர்ந்து, வாரிசை உருவாக்குகிறார்.

ஆனால் இன்று:

- பல பள்ளிகளிலும்,
- பல அரசியல் கட்சிகளிலும்,

"என்ன பிறகு யார் வருவார்?" என்ற கேள்விக்கு திட்டமிட்ட பதில் இல்லை. வயதான தலைவர்கள் தங்களின் ஆசனத்தை விடத் தயங்குகிறார்கள், அவர்கள் போன பிறகு வெற்றிடம் உருவாகிறது.

திருகோணமலையில்,

- பிரதேச மக்கள் வாழ்க்கையை நேரடியாக உணர்ந்து பேசும் தலைமைகள் குறைவு,
- வெளியிலிருந்து வந்து சமயோசிதமாக வாய்ப்பைப் பயன்படுத்தும் அரசியல்வாதிகள் அதிகம்.

இது தான் இன்று தமிழ் தேசிய அரசியலின் தளர்வுக்கும், சிங்கள மயமாக்கல் திட்டங்கள் வேகமாக முன்னேறுவதற்கும் முக்கியக் காரணம்.

**திருக்கோணேஸ்வரம் ஆலயம் இன்று மெதுவாக சிங்கள மயமாக்கப்படுவதாகவும், வணிகமாக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டு. அது எப்படி நடந்தது?**

வரலாற்று ரீதியாக இது:

- திருஞான சம்பந்தர் தேவாரம் பாடிய திருத்தலம்
- தமிழர்களின் பண்டைய சிவாலயம்

ஆனால் 17ஆம் நூற்றாண்டில் போர்த்துகீசர்கள் ஆலயத்தை இடித்தனர், கற்களை கடலுக்குள் வீசினார்கள். நூற்றாண்டுகளுக்கு ஆலயம் சிதில நிலையிலேயே இருந்தது. பின்னர் 1952க்கு பிறகு மீண்டும் ஆலயம் கட்டப்பட்டது.

பிறகு நடந்தது மிகவும் வேதனையானது:

- "ஒரு கடை தானே, இரண்டு கடைதானே" என்று ஆரம்பித்து,
- ஆலய சுற்றுவட்டாரத்தில் சில சந்தர்ப் பங்களில் வணிகத்திற்கு நிலம் கொடுக்கப் பட்டது.

இன்று பார்க்கும் போது: அந்த ஒரு கடை இடம், இன்று "58 கடைகள் வரிசையாக நிற்கும் வணிக வளாகம்" ஆகி விட்டது.

இது சிங்களமயமாக்கலின் மட்டுமே குற்றமில்லை; எங்களுடைய தமிழ் தலைமைத்துவ தவறுகள், எளிய சாமர்த்திய மையங்கள், வாக்கு அரசியலுக்காக அமைதியாக இருந்த பழக்கம் – இவை அனைத்தும் அதற்குக் காரணம்.

இப்போது:

- ஆலயத்தைச்சுற்றிஅரசுகட்டுப்பாட்டிலான அமைப்புகள்,
- பௌத்த அரசியலுடன் நெருங்கிய உறவு கொண்ட வணிகர்கள்,

இவர்கள் அதிகமாகின்றனர். இது திருக்கோணேஸ் வரம் ஒரு புனிதத் தலமாக இருந்து வணிகக் கூடமாக மாறும் அபாய அறிகுறி.

**இவ்வளவு வரலாறு, அநீதி, துன்பம் – இதற்கு நிரந்தர தீர்வு என்ன? தமிழர்கள் என்ன செய்ய வேண்டும்?**

என் பார்வையில், மூன்று அடிப்படைகள் அவசியம்:

- வரலாற்றை மீட்டெடுத்து ஆயுதமாக்க வேண்டும்
- மகாவம்சம் வரை தாங்கள் கூறும் வரலாற்றுக்கே எதிராக நிற்கும் பல ஆதாரங்கள் இருப்பதை நாமே உலகுக்கு காட்ட வேண்டும்.
- திருக்கோணேஸ்வரம், ராஜராஜ தம்ம பள்ளி, தமிழ் பௌத்த சமாதிகள் – இவை அனைத்தையும் ஆவணப்படுத்த வேண்டும்.
- தமிழ் பௌத்தம் – நாம் விட்ட ஆயுதத்தை மீண்டும் எடுக்க வேண்டும்
- தமிழ் பௌத்த மரபையும் அதன் துறவிகளையும் மீள உருவாக்க வேண்டும்.
- சிங்கள பௌத்தம் மட்டும் இந்த நாட்டின் அடையாளமல்ல; பௌத்தம் முதலில் தமிழரிடமிருந்ததே என்ற உண்மையை சொல்வதற்கு தமிழ் பௌத்தம் மிகத் தேவையான உளவியல் மற்றும் அரசியல் ஆயுதம்.
- ஒற்றுமை + திட்டமிட்டப் போராட்டம்
- உணர்ச்சி வசப்பட்ட கோஷம் போடுவதால் மட்டும் மாற்றமில்லை.
- நீதிமன்றம், ஊடகம், கல்வி, சர்வதேச தளங்கள் – அனைத்திலும் திட்டமிட்ட முயற்சிகள் அவசியம்.

முஸ்லிம்களையும், தாழ்த்தப்பட்ட சாதித் தமிழர்களையும், கிறிஸ்தவ தமிழர்களையும் ஒரே மேசையில் கூட்டிக் கொண்டு வராமல் எந்த தேசியக் கேள்விக்கும் தீர்வு வராது.

• • •



# குருதிஷ் மக்கள் ஏன் ஏகாதிபத்தியத்துடன் கைகோர்த்தனர்?

## இனப்படுகொலைக்கு உள்ளான அரசற்ற ஒரு தேசிய இனத்தின் வெளியுறவுக் கொள்கை அனுபவம்.

மு.திருநாவுக்கரசு.

### பகுதி 1

ஏகாதிபத்தியத்தின் சுரண்டலை விட ஆபத்தானது மக்களை அழித்தொழிக்கும் இனப்படுகொலையே. முதலில் இனம் அழிக்கப்படாமல் தப்பி உயிர்வாழ்வது முக்கியம். இனம் பாதுகாக்கப்பட்டால் பின்னாளில் அந்த இனம் பலம் பெற்று வளர்ந்து, ஏகாதிபத்தியத்தை துரத்தலாம். உயிர் போன பின்பு எதையும் செய்ய முடியாது. எதிலும் பாதுகாப்பே முதன்மையானது என்ற அடிப்படையில் ஒரு சமூகத்தின் உயிர் தப்பி வாழும் நடைமுறை உத்தி *(Survival tactics)* தீர்மானிக்கப்படுகிறது.

ஆதலால் இங்கு இனங்களின், மக்களின் பாதுகாப்பு என்பதை முதன்மையாக வைத்து, ஏகாதிபத்தியம் பற்றிய பிரச்சினையை இரண்டாவதாகவே கையாள வேண்டும். உயிரைப் பாதுகாக்க கொள்ளைக்காரனை அணுகுவதில் தவறில்லை.

அமெரிக்காவுக்கான நீதி, அமெரிக்கா கருதும் நீதி என்பன ஒருபுறம் இருக்க, இனப்படுகொலைக்கு உள்ளாகும், இன அழிப்புக்கு உள்ளாகும், பாலியல் வல்லுறவுக்கும் பாலியல் ரீதியான இன மாற்றத்துக்கும் உள்ளாகும் மக்களுக்கான நீதி இன்னொன்றாகும். இங்கு அமெரிக்காவின் நலன்களுக்கான நீதியும், ஒடுக்கப்படும் கொல்லப்படும் இனங்களுக்கான நீதியும் ஒரு தேவைப் புள்ளியில் சந்திக்கும் நிலையில் அமெரிக்காவின் ஏகாதிபத்திய நலனைக் காட்டி கொன்றொழிக்கப்படும் இனங்களின் நலனை நிராகரிக்க முடியாது.



இந்த நடைமுறை யதார்த்தம் தான் குருதிஷ் இன மக்களை, தங்களைச் சூழ்ந்துள்ள இஸ்லாமிய அரசுகளின் ஆதரவு கிடைக்க முடியாத நிலையில் ஏகாதிபத்திய அமெரிக்காவை நாடி தங்களுக்கான ஒருவகைச் சமஷ்டி முறையிலான ஆட்சியை பெறவைத்தது. அதைப் பற்றி கீழே விரிவாகக் காண்போம்.

அரசற்ற இனங்களின் அரசமைப்பதற்கான தேசிய விடுதலை போராட்டம் காலனிய ஆதிக்கத்திற்கு எதிரான நாடுகளின் தேசிய விடுதலை போராட்டத்தைவிட மிகவும் கடினமானது. காலனிய ஆதிக்கத்துக்கு உட்பட்ட நாடுகளின் தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு நாள் திட்டவட்டமாய் வெற்றி பெற்றே தீரும். ஆனால் ஓர் அரச கட்டமைப்புக்குள் அகப்பட்டு உள்ள ஒடுக்கப்பட்ட இனங்களின் போராட்டம் விடுதலையில் முடியலாம் என்று சொல்வதற்கு இல்லை. அவற்றிற் சில சிலவேளை விடுதலை பெறலாம். ஒருவேளை அழிக்கப்படலாம் அல்லது பாரிய இனஒடுக்கு முறையில் இருந்து தலையெடுக்க முடியாமலும் போகலாம்.

அரசற்ற இனங்கள் மேற்கொள்ளக்கூடிய தேசிய நிர்மாணக் கட்டமைப்பானது உள்ளும் புறமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என கட்டி எழுப்பப்பட வேண்டும்.

இங்கு உள்ளே அது நேரடியாக எதிரியின் இரும்புப் பிடிக்குள்ளிருக்கும். அப்படி இருந்து கொண்டு அது உள்நாட்டில் தேசிய நிர்மாணக் கட்டமைப்பை மேற்கொள்வது என்பது மிகுந்த சவாலுக்குரியது.

இத்தகைய ஒரு தேசிய இனத்தின் விடுதலையில் சமூக ஒட்டிணைவு, சமூக ஒருமைப்பாடு, சமூக ஐக்கியம் என்பனவற்றைக் கட்டி எழுப்ப வேண்டியது மிகவும் சவால் நிறைந்த அரும்பெரும் பணியாகும்.

இது நேரடியாக உள்நாட்டு கொள்கையோடு சம்பந்தப்பட்ட விடயமே ஆயினும் உள்நாட்டு கொள்கையின் நீட்சியே வெளிநாட்டு கொள்கை என்ற வகையில் இங்கு உள்நாட்டு கொள்கையையும் வெளிநாட்டுக் கொள்கையையும் சம சீராக பொருத்திப் பார்க்க வேண்டும்.

சாகச வீரன் சுழலும் நெருப்பு வளையத்துக்குள்ளால் பாயும் போது " தருணம் தப்பினால் மரணம் கரணம் தப்பினால் மரணம்" என்ற இரு நிலைக்கும் பொருத்தமாக பாய வேண்டியது தலையாயது.

அவ்வாறே அரசற்ற ஒரு தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தில் உள்ளும் புறமும் என இரு கொள்கைகளும் ஒன்றை ஒன்று அரவணைத்து ஒட்டியவாறு ஒன்றுக்கு இன்னொன்று அரணாக அமையக்கூடியவாறு உள்நாட்டு வெளிநாட்டு கொள்கைகள் இரண்டையும் ஒன்றுக்கொன்று பொருத்தமாகவும் நிகராகவும் வடிவமைக்க வேண்டும். இங்கு உள்ளாட்டுக் கொள்கை மட்டும் முதன்மையானது என்று எடுத்துக் கொள்வது தவறு. வேளிநாட்டு கொள்கை பிழைத்தால் உள்நாட்டு கொள்கை பயனற்று அழிவில் மாமும்.




இந்த வகையில் இன அழிப்புக்கு உள்ளாகி விடுதலைக்காக போராடிய ஒரு இனமென்ற வகையில் குருதிஷ் இன மக்களின் விடுதலைக்கான வெளியுறவு கொள்கை பற்றிய படிப்பினை கவனத்திற்குரியது.

இந்த வகையில் அரசற்ற பல தேசிய இனங்களின் போராட்டங்கள் சில வெற்றியிலும் சில தோல்வியிலும் சில அழிவிலும் முடிந்துள்ளன. அவை ஒவ்வொன்றையும் விடுதலைக்காகப் போராடும் ஈழத் தமிழினம் கருத்தில் எடுத்து அவை சார்ந்த படிப்பினைகளுக்கு ஊடாக தமக்கான வெளியுறவு கொள்கைகளை திட்டமிட வேண்டும். அந்த வகையில் இங்கு குருதிஷ் இன மக்களின் வெளியுறவு கொள்கை சம்பந்தமாக ஒரு பொதுப் போக்கான குறுக்குவெட்டுப் பார்வையை இக்கட்டுரை செலுத்துகிறது. இதனை மேலும் விரிந்த அளவில் பார்க்க வேண்டும் என்பது அவசியமாகும். ஆனால் இச்சிறு கட்டுரை குறுக்குமுகப் பார்வையோடு தன் பணியை சுருக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

குருதிஷ்தான் என்பது மேற்கு ஆசியாவில் அமைந்துள்ள 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால செழிப்பான பண்பாட்டை கொண்ட ஒரு தேசிய இனமாகும்.

இது தென்கிழக்கு துருக்கி, வடமேற்கு ஈரான், வடக்கு ஈராக் மற்றும் வடகிழக்கு சிரியாவின் சில பகுதிகளை உள்ளடக்கிய நிலப் பகுதியையும் பரந்த மக்கள் தொகையும் கொண்ட கடல் எல்லையற்ற தரையால் சூழப்பட்ட நாடு *(Land locked country)* ஆகும்.

பிரதானமாக இஸ்லாமியர்களான இம்மக்கள் 75% விழுக்காடு சுன்னி இஸ்லாம் *(Sunni Islam)* மதப் பிரிவையும் மிகுதி 25% விழுக்காட்டினரில் பெரும் பான்மையோர் ஷியா இஸ்லாம் *(Shia Islam )* மதப் பிரிவையும் ஏனையோர் கிறிஸ்தவம் மற்றும் உள்ளூர் மதப் பிரிவுகளையும் சேர்ந்தவர்களாவர்.

பொதுவாக குருதிஷ் மக்கள் இஸ்லாமியர்களே ஆயினும் இவர்களின் நிலப்பரப்பு நான்கு பலம் பொருந்திய இஸ்லாமிய நாடுகளின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு அந்நாடுகளிடையே பங்கு போடப்பட்டுள்ளது.

இந்த நான்கு இஸ்லாமிய நாடுகளும் ஒரே வேளையில் குருதிஸ் மக்களின் எதிரிகள். அந்த வகையில் மேற்படி நான்கு எதிரிகளும் ஒடுக்கு முறை பொறுத்து ஒரு பக்கம். அதேவேளை பொதுவாக உலகில் உள்ள பெரும்பான்மையான இஸ்லாமிய நாடுகள் மேற்படி அரசுகளைக் கொண்டுள்ள நான்கு இஸ்லாமிய நாடுகளின் குருதிஷ் எதிர்ப்பின கொள்கைக்கு ஆதரவானவையும் குருதிஷ் விடுதலைப் போட்டத்திற்கு எதிரானவையும் ஆகும்.

உலக அரங்கில் குருதிஷ் போராட்டத்திற்கு அமெரிக்காவும் இஸ்ரவேலும் தமது நலம் சார்ந்த நோக்கு நிலையில் நின்று ஆதரவளித்த போதிலும் அது எல்லைக்குட்பட்ட ஆதரவாகவே உள்ளது.




முதலாவதாக அமெரிக்காவின் நேட்டோ *(NATO)* கூட்டாளியான துருக்கியின் நலனுக்கும் கோபத்திற்கும் உள்ளாகாமல் இருக்க வேண்டும். இரண்டாவதாக வளைகுடாவில் பிராந்திய வல்லரசச் சமநிலை *(Reginal Balance of Power)* பொறுத்து ஈராக்கில் இருந்து குருதிஷை பிரித்து தனியரசு ஆக்கிவிட்டால் ஈரானின் பிராந்திய சமநிலை மேலோங்கிவிடும். எனவே தமது நலனுக்காக ஒருபுறம் குருதிஷ் போராட்டத்தை ஆதரித்த போதிலும் மறுபுறம் தமது நீண்ட பிரதான நலன்களை பாதிக்காத வகையிலும் பார்த்துக் கொள்ள வேண்டிய கொள்கையை அமெரிக்கா கொண்டுள்ளது.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# இலங்கையின் பாடசாலை பாட விதானமும் பல்கலாசாரக் கல்வியின் சாதக, பாதக தன்மையும்.

பல்கலாச்சாரமக்கள்சமூகம்என்பதன்பொருள் சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மக்கள், இனங்கள், மொழிகள், மதங்கள், கலாச்சார பாகுபாடுகள் ஆகியவற்றை கொண்ட மக்கள் சமுதாயம் ஆகும். இத்தகைய சமுதாயத்தில் பல் வேறு வாழ்க்கை பணிகள், உறுதிப்பொருள்கள், நம்பிக்கைகள், விசுவாசங்கள், ஒழுக்க நெறிகள், உடைகள், மொழிகள் என்பன காணப்படும். காலத்தினால் ஒவ்வொரு மக்களினங்களும் இந்த பல்வகைமையை சமுதாய மற்றும் கலாச்சார அடிப்படையில் கட்டி எழுப்பியுள்ளன. மக்கள் இனங்களின் தனித்துவத்தின் மீது விசேடமாக மொழி மற்றும் மதம் காரணமாக ஏற்பட்ட இந்த கலாச்சாரபல்வகைமைஆதிக்கம்செலுத்துகின்றது.

கலாச்சாரம் என்னும் பதத்திற்கு பொருள் மனிதனது இயல்பானது கலாச்சாரத்தின் இயல்பு எனலாம். நாங்கள் வாழும் கலாச்சார சூழல் எமது நடத்தைகளை பெரும்பாலும் உருவாக்குகின்றது. உயிர்களது நடத்தையானது பிறப்பிலிருந்து கொண்டு வந்த உயிரியல் நேர அட்டவணை ஒன்றின்படி நிகழும். மனிதர்களது நடத்தை அதனை விட சிக்கல் வாய்ந்ததாக இருப்பதற்கான காரணம் அவர்கள் கலாச்சார நேர அட்டவணை ஒன்றின்படி நடந்து கொள்ள வேண்டியமையாகும். பிரிட்டன் மனிதவியல் வல்லுனர் ஈ. பீ ரேலரின் கருத்துப்படி "கலாச்சாரம் என்பது சிக்கல் வாய்ந்த முழுமையான செயல் முறை ஒன்றாகும். அதில் அறிவு, நம்பிக்கைகள், கவின் கலைகள்,நாகரிகம், சட்டம், ஒழுக்க நெறிகள் முதலிய அடங்கி உள்ளது".



அமெரிக்க நாட்டு சமூக விஞ்ஞானி ஒருவரான W.E.P டுபோய்ஸ் என்பவரின் கருத்துப் படி "கலாச்சாரம் என்பது ஒழுக்க நெறிகள், எண்ணப் போக்குகள் நம்பிக்கைகள் ஆகிய வற்றைக் கொண்ட பரந்த சமூகச் சூழலாகும்" எவ்வாறு இருப்பினும் தண்ணீர் மக்களின் மீது எத்தகைய செல்வாக்கினை செலுத்துகின்றதோ அத்தகைய செல்வாக்கினை கலாச்சாரம் மனித இனத்தின் மீது செல்வாக்கு செலுத்துகின்றது.

பரஸ்பர செயற்பாட்டின் இயல்பு மனிதர்களது மனதில் வேரூன்றி உள்ளபடியால் யுனெஸ்கோ சமவாயத்தின் தொடக்கத்திலேயே பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. "யுத்தத்தின் வித்து மனிதனுடைய மனதுக்குள் உண்டாகுவதனால் சமாதானத்தின் பாதுகாப்பும் மனிதனுடைய மனதுக்குள்ளேயே கட்டி எழுப்பப்படுதல் வேண்டும்" ஆதலால் சமூக மயப்படுத்தலின் முக் கிய காரணிகளில் ஒன்றாக கல்வியானது இன்றிய மையாததாகக் காணப்படுகின்றது.



இலங்கையானது பல்கலாச்சார தன்மை கொண்ட நாடாக காணப்படுகின்றது. ஆகவே இங்கு மக்கள் மத்தியில் சமத்துவத்தை கையாள வேண்டியது முக்கியமானதாக உள்ளது. இச்சமத்துவத்தை மேற்கொள்வதற்கு கல்வியானது அடித்தளமாகக் காணப்படுகின்றது.; இலங்கையில் பாடசாலை பாடத்திட்டத்தின் ஊடாக பல்கலாச்சாரம் பற்றி போதிக்கப்படுகின்றது. உதாரணமாக சுற்றாடல் சார்ந்த செயற்பாடுஇ குடியியல் போன்ற பாடங்கள் மூலமாக பல்கலாச்சாரத்தை பற்றி மாணவர்களுக்கு விழிப்பூட்டப்படுகின்றது.

**முஹம்மது நவாஸ் நஸ்மர்**
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

அந்த வகையில் இலங்கையின் பாடசாலை பாடவிதானத்தில் பல்கலாச்சார தன்மையின் சாதக பாதகம் பற்றி நோக்குவோம்.

இலங்கை, சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் பறங்கியர் போன்ற பல்வேறு இனங்கள், மதங்கள் மற்றும் கலாசாரங்களை உள்ளடக்கிய ஒரு பன்மைத்துவ நாடாகும். இந்த சமூகப் பன்முகத்தன்மையைப் பிரதிபலிக்கும் வகையிலும், இனங்களுக்கிடையேயான மோதல்களுக்குப் பிந்தைய சூழலில் சமூக நல்லிணக்கத்தை (Social Cohesion) ஏற்படுத்தும் நோக்கிலும், பல்கலாசாரக் கல்வி (Multicultural Education) என்பது இலங்கையின் பாடசாலைப் பாடத்திட்டத்தில் ஒரு அத்தியாவசிய அங்கமாகியுள்ளது. பல்கலாசாரக் கல்வி என்பது, அனைத்து மாணவர்களுக்கும் சமமான கல்வி வாய்ப்பை உறுதி செய்வதோடு, பன்முக கலாசாரங்களின் வரலாறு மற்றும் பங்களிப்புகள் பற்றிய அறிவை அளிப்பதையும் நோக்கமாகக் கொண்டது என ஆய்வுகள் வரையறுக்கின்றன. எவ்வாறாயினும், இதை நடைமுறைப்படுத்துவதில் ஆழமான தாக்கங்கள் மற்றும் சவால்கள் காணப்படுகின்றன.



**பல்கலாசாரக் கல்வியின் சாதகங்கள் (Advantages)**

இலங்கையின் பாடசாலைப் பாடத்திட்டத்தில் பல்கலாசாரக் கல்வியை ஒருங்கிணைப்பதால் ஏற்படும் முக்கிய சாதகங்களை பல கல்வி அறிக்கைகள் மற்றும் ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன:

**சமூக மற்றும் இன நல்லிணக்கம்:**

நீண்டகால மோதல்களுக்குப் பிறகு, நல்லிணக்கத்தை அடைவதற்கு கல்வி முறைமை ஒரு முக்கியமான களமாகிறது. பல்கலாசாரக் கல்வி, மாணவர்களைப் பல்வேறு இனக் குழுக்களின் கலாசாரங்கள், நம்பிக்கைகள் மற்றும் பாரம்பரியங்கள் பற்றிப் புரிந்துகொள்ளச் செய்வதன் மூலம், தப்பெண்ணங்களைக் குறைக்க உதவுகிறது (Colenso, 2005; ResearchGate, 2019). பல்கலாசாரப் பாடசாலைகளில், மாணவர்கள் மத்தியில் பாதுகாப்பு மற்றும் சௌகரிய உணர்வு நிலவுவதாகவும், இது சமூக ஒருங்கிணைப்பை அடைவதற்கான அரசாங்க முயற்சிகளின் வெற்றிக்குச் சான்றாகும் எனவும் குறிப்பிடுகிறது.

**இருமொழிக் கல்வி மற்றும் தொடர்பாடல் திறன் வளர்ச்சி:**

சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இருமொழிக் கல்வித் திட்டம் (Bilingual Education - BE), ஆங்கிலம் மற்றும் சிங்களஃதமிழ் ஆகிய மொழிகளில் முக்கியப் பாடங்கள் கற்பிக்கப்படுவதன் மூலம், வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த மாணவர் களை ஒன்றிணைக்கிறது. ஆய்வுகளின் படி, ஆங்கிலத்தை ஒரு பொது மொழியாகக் கற்பது, மாணவர்களிடையே இனமொழி நல்லிணக்கத்திற்கான நேர்மறையான மனப்பான்மையை வளர்ப்பதை சாத்தியமாக்கியுள்ளது. இது மாணவர்கள் பன்மொழித் திறனைப் பெறவும், பரந்த கல்வி மற்றும் மேம்பட்ட வாழ்க்கை வாய்ப்புகளை அணுகவும் உதவுகிறது.



**பாரபட்சமற்ற பாடநூல்கள் மற்றும் உள்ளடக்கம்:**

பாடநூல்களை சீர்திருத்தி, இன அடிப்படையிலான பாரபட்சங்களைக்நீக்குவதும், சிங்களமற்றும்தமிழ் மக்கள் இணைந்து பணியாற்றும் நேர்மறையான உதாரணங்களைச் சேர்ப்பதும் பல்கலாசாரக் கல்வியின் ஒரு பகுதியாகும். இந்த முயற்சி, அனைத்து தேசியச் சிறுபான்மையினரையும் இலங்கையின் சட்டபூர்வமான குடிமக்களாக அங்கீகரித்து, அடையாள அடிப்படையிலான சமத்துவமின்மையைத் தணிக்கும் பாதையாகக் கருதப்படுகிறது. அத்துடன், இது மாணவர்களுக்கு விரிவான வரலாற்றுக் கண்ணோட்டத்தை அளிக்கிறது.

**விரிவான உலகப் பார்வையும் சகிப்புத்தன்மையும்:**

பல்கலாசார வகுப்பறை அமைப்பில், மாணவர்கள் பல்வேறு பார்வைகள் மற்றும் மரபு களுக்கு ஆளாகின்றார்கள். இது ஒரு; பரந்த மனப்பான்மை கொண்ட உலகப் பார்வையை வளர்க்கின்றது (Ideal School, 2023). இது சகிப்புத்தன்மையையும், மக்களைப் பற்றிய வித்தியாசங்களைப் புரிந்து கொண்டு ஏற்றுக்கொள்வதையும் ஏற்படுத்துகிறது. ஒரு பல்வகைப்பட்ட சமுதாயம் மற்றும் ஒரு வருக்கொருவர் இணைக்கப்பட்ட உலகிற்குத் தயாராவதற்கு இது ஒரு அத்தியாவசியத் திறனாகும். பல்கலாசாரக் கல்வியின் பாதகங்கள் மற்றும் சவால்கள்(Disadvantages and Challenges) பல்கலாசாரக் கல்வியின் இலட்சியங்கள் பாராட்டத்தக்கவை என்றாலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதில் பல சவால்கள் நிலவுகின்றன.

**மொழி வழிப் பிளவு மற்றும் தொடர்பாடல் சிக்கல்கள்:**

இலங்கையின் கல்வி முறைமை தாய்மொழி வழிக் கல்வியை வலியுறுத்துகிறது. இது, மொழியியல் ரீதியான பிரிவுகளை வலுப்படுத்துகிறது என ஆய்வுகள் கூறுகின்றன (ERIC, 2016). மேலும்,

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# மலையக அரசியல் நகர்வுகள்: உறுதியின் பலமும் இணக்க அரசியலும்

மருதன் ராம்

பெருந்தோட்ட மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியற் கட்சிகள் அண்மையில் சில தீர்க்கமான முடிவுகளை மேற்கொண்டிருந்தன. அண்மைய அரசியல் நகர்வுகளில், எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் சில மலையக மக்களின் பிரதிநிதிகள் முக்கிய விடயங்களில் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் முடிவை எடுத்திருப்பது, இலங்கையின் அரசியல் களத்தில் முக்கிய கவனத்தைப் பெற்றுள்ளது.



இந்த முடிவானது வெறுமனே அரசியல் கட்சியின் மாற்றம் என்ற எல்லைக்குள் நின்றுவிடாமல், மலையக மக்களின் நீண்ட கால அபிலாஷைகள், நாட்டின் இன நல்லிணக்கம் மற்றும் அதிகாரப் பகிர்வு ஆகியவற்றை இலக்காகக் கொண்டதாக அமைந்துள்ளது என ஆளும் தரப்பினர் வாதிடுகின்றனர்.

எதிர்க் கட்சிகள் கூட்டாக ஒன்றிணைந்து செயற்பட்டமைக்கு, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி (SJB) பெருந்தோட்ட மலையக தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக முன்வைத்த விமர்சனம் ஒரு முக்கிய காரணமாக அமைந்தது. பெருந் தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வுக்காக நிதியை ஒதுக்கும் அரசாங்கத்தின் யோசனைகளை ஐக்கிய மக்கள் சக்தி விமர்சித்தது.



இவ்வாறு அரசாங்கம் நேரடியாக நிதியைக் கையாளும் முயற்சி, முரணானது என்றும், இந்த விடயம் தோட்ட உரிமையாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே தீர்க்கப்பட வேண்டும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி வாதிட்டது. அத்துடன் அரசாங்கத்தின் முடிவை சவாலுக்கு உட்படுத்தி சட்ட ரீதியான அணுகுமுறைகளையும் எதிர்க்கட்சியினர் கையாண்டனர்.

இந்த விமர்சனம், ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் மலையக அரசியல் பிரதிநிதிகளிடையே பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியது. அத்துடன் எதிரணியில் உள்ள ஏனைய மலையக அரசியல் பிரதிநிதிகளுக்கும் இதே அதிருப்தி ஏற்பட்டது. அரசாங்கம் தமது மக்களுக்கு நேரடியாக நிதி உதவியை வழங்குவதை, தமது பிரதான கட்சி எதிர்ப்பது, மலையகப் பிரச்சினைகளை கட்சித் தலைமை சரியான கண்ணோட்டத்தில் பார்க்கவில்லை என்பதைக் காட்டுவதாக அவர்கள் கருதினர்.

சமூகத்தின் அவசரமான தேவைகளுக்கும், கட்சியின் நிலைப்பாட்டிற்கும் இடையே இருந்த இந்த முரண்பாடே, பல பிரதிநிதிகள் அரசாங்கத்தின் வரவு செலவு திட்டத்துக்கு ஆதரவளிக்க அல்லது எதிர்க்கட்சியின் செயற்பாடுகளிலிருந்து விலகி நிற்க முக்கிய தூண்டுதலாக இருந்தது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரான மனோ கணேசன், வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு ஆதரவாக வாக்களித்தமைக்கான காரணத்தை அண்மையில் தெளிவுபடுத்தினார். அவரும், கூட்டணியைச் சேர்ந்த ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களான பழனி திகாம்பரம், வேலுசாமி இராதாகிருஷ்ணன் ஆகியோரும் இந்த ஆதரவை வழங்கினர். குறித்த அறிக்கையில், மனோ கணேசன், “தோட்டத் தொழிலாளருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.1,750 வேதனம் வழங்க ஏற்பாடு செய்வதாக ஜனாதிபதி வழங்கிய உறுதியின் மீதான தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் முகமாகவே நாம் ஆதரவு அளிக்கிறோம்” என்று குறிப்பிட்டார்.

அத்துடன், “மூன்று அரச தோட்ட நிறுவனங்கள், 22 தனியார் தோட்ட நிறுவனங்கள், சிறுதோட்ட உடைமையாளர்களது தோட்டங்கள் ஆகிய அனைத்திலும் தொழில் புரியும் தொழிலாளர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரி ரூ.1,750 கிடைக்க வேண்டும்” என்ற கோரிக்கையையும் அவர் வலியுறுத்தினார். மேலும், இந்தச் சம்பளத் தொகைக்கு பின்னாலுள்ள கட்டமைப்பை ஆராய்வதில் தங்களுக்கு ஆர்வம் இல்லை என்றும் அது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் அவர் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தினார்.



இந்த அறிக்கை, மலையக அரசியல்வாதிகள் தமது ஆதரவை மக்களின் அடிப் படை வாழ்வாதாரக் கோரிக்கையின் நிறைவேற்றத்துடன் நேரடியாக இணைத்துள்ளதைக் காட்டுகிறது. இதேவேளை கடந்த 21ஆம் திகதி கொழும்பு நுகேகொடை பகுதியில் பொதுஜன பெரமுன தலைமையிலான எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துக்குஎதிராகநடத்தியபோராட்டத்தில் மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கியஸ்தர்கள் எவரும் பங்கேற்கவில்லை.

இது, மலையக அரசியல்வாதிகள் எதிர்க் கட்சியின் நிலைப்பாட்டிலிருந்து விலகி நிற்கின்றமைக்கான தெளிவான அறிகுறியாகும். தமது சமூகத்தின் அடிப்படைப் பிரச்சினைகள் கட்சிகளின் தலைமை மட்டத்தில் முறையாகக் கையாளப்படாதபோது, கட்சி முன்னெடுக்கும் அரசாங்க எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்கெடுத்துப் பயனில்லை என அவர்கள் உணர்ந்திருக்கலாம். இந்த விலகல், மலையகப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, ஆளும் தரப்புடனான இணக்க அரசியலே இப்போதைய கட்டாயத் தேவை என்ற எண்ணத்தை வலுப்படுத்தியுள்ளது. இதேவேளை, இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் “இலங்கை” என்ற தினத்தை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராகி வருகின்றது. இதற்காக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கலந்துரையாடியிருந்தார்.

இந்த சந்திப்பு தொடர் பில் தமது சமூக ஊடகப்பக்கத்தில் பதிவிட்டுள்ள ஜனாதி பதி, “அனைத்து மத மற்றும் கலாசார அடையாளங்களையும் மதித்து, இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் சுதந்திரமாக வாழ வாய்ப்பு இருக்க வேண்டும் என்றும், நமது நாடு எந்தவொரு இனவாத வலையிலும் சிக்குவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்றும் வலியுறுத்திய நான், அதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்திற்கு அனைவரும் ஆதரவளிக்குமாறு அழைப்பு விடுத்தேன்.

சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதன் மூலம் நல்லிணக்கத்துடன் கூடிய இலங்கையை உருவாக்கும் தொலைநோக்குப் பார்வையுடன், அனைத்து சமூகங்களையும் ஒன்றிணைத்து இலங்கை தினத்தை கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக அனைத்து சமூகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துகளும் பரிந்துரைகளும் இங்கு வினவப்பட்டதுடன், இந்த நடவடிக்கைகள் குறித்த கலந்துரையாடலில் பங்கேற்ற அனைத்து பிரதிநிதிகளாலும் இந்த நிகழ்ச்சித் திட்டம் பெரிதும் பாராட்டப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும், அனைவரும் ஒன்றிணைந்து செயல்படக்கூடிய வகையில் நிகழ்ச்சிகளையும் செயற்றிட்டங்களையும் உருவாக்குமாறு ஏற்பாட்டுக் குழுவிற்கு நான் அறிவுறுத்தினேன். நாட்டிலுள்ள இனப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சிகளுக்குத் தமது ஆதரவை வழங்குவது மற்றுமொரு முக்கிய இலக்காகும். நாட்டின் பிரதான அரசியல் நீரோட்டத்தில் இணைந்து செயற்படுவதன் மூலம், சிறுபான்மையினரின் உரிமைகளை உறுதிப்படுத்துதல் மற்றும் இலங்கையர் என்ற தேசிய உணர்வை வலுப்படுத்துதல் ஆகியவற்றுக்கான வாய்ப்புகள் அதிகரிக்கும் என இவர்கள் கருதுகின்றனர்” என்று குறிப்பிட்டிருந்தார்.



இந்தநிலையில் ஜனாதிபதியுடனான சந்திப்பு தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில், இனவாதத்தை ஒழிக்க, “இலங்கையர் தினத்தை” நடத்த, ஜனாதிபதி அனுர, எம்மை அழைத்து, எமது ஒத்துழைப்புகளை கோரினார்.

“இனவாதத்தை ஒழிக்க, நீங்கள் கோரும் ஒத்தாசைகளை முழுமையாக வழங்குவோம்.”

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## சூடானில் இருந்து ... தொடர்ச்சி ...

கடந்த வியாழக்கிழமை(27) நோர்வே அகதிகள் கவுன்சில் (NRC) தெரிவித் துள்ளது.

குழந்தைகள் சோர்வடைந்தும், மிகுந்த மன உளைச்சலுடனும் தவிலாவை அடைகிறார்கள், பெரும்பாலும் பாலைவனத் தின் வழியாக பல நாட்கள் நடந்து சென்ற பிறகு, பலர் தாங்கள் தப்பி ஓடிய அல்லது சாலையில் சந்தித்திருக்கக்கூடிய ஆயுதக் குழுக்களைப் பார்த்து பயந்து வருகிறார்கள். பலர் குண்டு வீச்சு விமானப் பறப்பின் குழப்பத்தின் போது தங்கள் பெற்றோரிடமிருந்து பிரிந்துள்ளனர், மற்றவர்களின் பெற்றோர் காணாமல் போயிருக்கலாம், தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் அல்லது கொல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது என அந்த குழு தெரிவித்துள்ளது.

அக்டோபர் 26 அன்று சூடானின் வடக்கு டார்ஃபர் மாநிலத்தின் தலைநகரான - எல்-ஃபாஷரின் கட்டுப்பாட்டை RSF கைப்பற்றியது, இந்த நடைவடிக்கை அங்கிருந்த மக்ககளுக்கு உணவு, மருந்து மற்றும் பிற முக்கியமான பொருட்களைத் துண்டித்தது.

ஏப்ரல் 2023 முதல் சூடானின் கட்டுப்பாட்டிற்காக சூடான் ஆயுதப்படைகளுடன் போராடி வரும் துணை ராணுவக் குழு, நகரத்தைக் கைப்பற்றியதில் இருந்து கொலைகள், கடத்தல்கள் மற்றும் பரவலான பாலியல் வன்முறைச் செயல்களைச் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தலைவர் வோல்கர் டர்க் நவம்பர் நடுப்பகுதியில் எல்-ஃபாஷரில் மேற்கொள்ளப் பட்ட "அட்டூழியங்கள்" "மிகக் கடுமையான குற்றங்கள்" என்று தெரிவித்திருந்தார்.

ஐ.நா.வின் சமீபத்திய புள்ளிவிவரங்களின் படி, கடந்த மாதம் RSF கைப்பற்றப்பட்டதிலிருந்து 100,000 க்கும் மேற்பட்டோர் எல்-ஃபாஷரை விட்டு வெளியேறியுள்ளனர், பலர் அருகிலுள்ள காட்டில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

அதே நேரத்தில், பிராந்தியத்தில் மோசமடைந்து வரும் நிலைமை சூடான் பெண்கள் மற்றும் சிறுமிகளை பாலியல் சுரண்டல் மற்றும் கடத்தல் அபாயத்திற்கு ஆளாக்கியுள்ளது என்று ஐ.நா. நிபுணர்கள் குழு வியாழக்கிழமை(27) எச்சரித்துள்ளது..

"RSF கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பெண்கள் மற்றும் சிறுமிகள் கடத்தப்பட்டுள் ளனர். மேலும் பெண்கள், ஆதரவற்ற மற்றும் பிரிக்கப்பட்ட குழந்தைகள் பாலியல் வன்முறை மற்றும் பாலியல் சுரண்டலுக்கு ஆளாகும் அபாயத்தில் உள்ளனர்."

குடும்பங்கள் தங்குமிடம், மனிதாபிமான உதவி மற்றும் சுகாதாரம் மற்றும் கல்வி உள்ளிட்ட அடிப்படை சேவைகளுக்கான அணுகல் இல்லாமல் விடப்பட்டுள்ளதைக் குறிப்பிட்ட நிபுணர்கள், "இந்த துன்பத்திற்கு காரணமான மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டு வர அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அழைப்பு விடுத்துள்ளனர்.

## சோமாலியாவில் ... தொடர்ச்சி ...

வழித் தாக்குதல்களுக்குப் பிறகு, PCTF சுமார் 200 துருப்புக்களுடன் இந்த தாக்குதலை அமெரிக்கா மேற்கொண்டுள்ளது, வான் தாக் குதல்களில் பல போராளிகள் ஏற் கனவே கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதல் சிரியா, துருக்கி மற்றும் எத்தியோப்பியாவைச் சேர்ந்த வெளிநாட்டு போராளிகளுடனான மோதல்கள்ளாகும்.

நன்கு பலப்படுத்தப்பட்ட குகைகளுக்குள் இரண்டு முதல் நான்கு மணிநேரம் கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளது. சூரிய உதயத் திற்குள் அமெரிக்க மற்றும் Pஊவுகு படைகள் பின்வாங்கின, அமெரிக்க உயிரிழப்புகள் எதுவும் பதிவாகவில்லை. ஆரம்பகால முடிவுகள், ஒரு மூத்த ISIS-சோமாலியா தளபதி மற்றும் பல உதவியாளர்கள் கொல்லப்பட்டதாகக் தெரிவிக் கின்றன, மொத்தம் 5 முதல் 10 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

குழுவிற்கு நிதியளித்த தங்கச் சுரங்க நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் ஆயுதக் கிடங்குகள் மற்றும் உபகரணங்களையும் படைகள் அழித்தன. பன்ட்லேண்டின் தலைமை, அதன் ஆபரேஷன் ஹிலாக் இப்போது கிட்டத்தட்ட அனைத்து கால் மிஸ்காட் மலைகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாகவும், டிசம்பர் 2025 க்குள் ஐஎஸ்ஐஎஸ்-சோமாலியாவை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதாகவும் கூறுகிறது.

## இலங்கையின் ... தொடர்ச்சி ...

பல்கலாசார வகுப்பறைகளில், சில மாணவர்கள் சிங்கள வழியிலோ அல்லது தமிழ் வழியிலோ திறம்பட தொடர்புகொள்ள முடியாமை மொழித் தடையை உருவாக்குகிறது. ஆசிரியர்களில் பலர் இரு தேசிய மொழிகளிலும் சரளமாகப் பேசத் தெரியாததும், பயிற்றுவித்தலில் குறிப்பிடத்தக்க கவலையை ஏற்படுத்துகின்றது.

**வளங்களின் சமமற்ற விநியோகம்:**
நகர்ப்புறப் பாடசாலைகள் மற்றும் கிராமப்புறப் பாடசாலைகள் இடையே வளங்கள் மற்றும் வசதிகளின் சமமற்ற விநியோகம் ஒரு பெரிய சவாலாகும் (IDE Report, 2013). பாடநூல்கள் அல்லது கற்பித்தல் வளங்களை உரிய நேரத்தில் விநியோகிக்க முடியாமை போன்ற காரணங்களால், குறிப்பாகப் போர் பாதித்த வடக்கு போன்ற பிரதேசங்களில் உள்ள தமிழ் மாணவர்கள் அடையாளம் சார்ந்த கல்விச் சமத்துவமின்மையால் பாதிக்கப்பட்டனர். இதனால் பல்கலாசாரக் கல்வியின் முழுப் பலன்களும் அனைவருக்கும் கிடைப்பதில்லை.

**ஆசிரியர் பயிற்சி மற்றும் திறன்கள் பற்றாக்குறை:**
பல்கலாசாரக் கல்வியை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த, ஆசிரியர்களுக்குத் தகுந்த பயிற்சி இன்றியமையாதது. இருப்பினும், புதிய கல்வி அணுகுமுறைகளை திறம்படச் செயல்படுத்தத் தேவையான திறன்கள் மற்றும் அறிவை ஆசிரியர்களுக்கு வழங்குவதில் பற்றாக்குறை நிலவுகின்றது. மேலும், ஒரு பகுதியினர் அத்தியாவசியமான பட்டதாரி பட்டப் பயிற்சிப் பெற்றிருக்கவில்லை எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

**பாடத்திட்ட வடிவமைப்பில் உள்ள சிக்கலும் எதிர்ப்பும்:**
பல்வேறு கலாசார உள்ளடக்கங்களை உள்ளடக்கிய ஒரு பாடத்திட்டத்தை வடிவமைப்பதில் சிக்கல்கள் உள்ளன. இது கல்வித் திட்ட வடிவமைப்பாளர்களுக்கு அதிக நேரத்தை எடுத்துக்கொள்வதோடு, சவாலானதாகவும் இருக்கிறது. அத்துடன், பல்கலாசாரக் கல்வி பாரம்பரிய பாடத்திட்டத்தின் தரத்தைக் குறைத்து விடும் அல்லது தங்கள் சொந்த கலாசாரத்தைக் "கலப்பிவிடும்" என்ற கவனக்குறைவு அல்லது அறிமுகமின்மை காரணமாக சில மாணவர்களிடமிருந்தும் பெற்றோரிடமிருந்தும் எதிர்ப்புகள் எழலாம் என கல்வி நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அரசியல்மயமாக்கப்பட்ட வரலாறு: சமீபத்திய வரலாற்றுப் பாடநூல்கள் பற்றிய ஆய்வுகள், சிறுபான்மை இனங்களின் அடையாளங்கள் அரிதாகவே குறிப்பிடப்படுவதாகச் சுட்டிக்காட்டுகின்றன. இது, சுதந்திரத்திற்குப் பிந்தைய வரலாற்றில் காணப்பட்ட பாரபட்சத்தை மீண்டும் பிரதிபலிக்கிறது. கல்வி ஒரு குறிப்பிட்ட தேசிய அடையாளத்தை உருவாக்க வழிவகுக்கலாம், ஆனால் இது அரசியல் ரீதியான தாக்கங்களால் கட்டமைக்கப்பட்டு, சமூக சமத்துவமின்மையை மறுஉருவாக்கம் செய்யும் அபாயத்தையும் கொண்டுள்ளது.

இலங்கையின் பாடசாலைப் பாடவிதானத்தில் பல்கலாசாரக் கல்வி என்பது, நல்லிணக்கம் மற்றும் சமூக ஒருமைப்பாட்டிற்கான ஒரு முக்கியமான பாதையாகும். ஆய்வுகள் மற்றும் அறிக்கைகள் சுட்டிக்காட்டும் பல சாதகங்கள், மாணவர்களின் பரந்த புரிதல், சகிப்புத்தன்மை மற்றும் மேம்பட்ட மொழித் திறன்களை வளர்க்க உதவுகின்றன. எவ்வாறாயினும், மொழித் தடை, சமமற்ற வள விநியோகம், ஆசிரியர் பயிற்சிப் பற்றாக்குறை மற்றும் பாடநூல் உள்ளடக்கம் மீதான அரசியல் தாக்கம் போன்ற சவால்களை ஒப்புக்கொள்வது அவசியம்.

பல்கலாசாரக் கல்வியின் முழுப் பலனையும் அறுவடை செய்ய, பன்மைத்துவத்தை உணர்திறனுடன் உள்ளடக்கிய ஒரு சீரான பாடத் திட்டத்தை உருவாக்க வேண்டும், ஆசிரியர் களுக்கு முறையான இருமொழிக் கல்வியும் பன்முக கலாசாரப் பயிற்சியும் வழங்கப்பட வேண்டும், மேலும் அனைத்துப் பாடசாலைகளுக்கும் சமமான வளங்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். பல்கலாசாரக் கல்வியின் கோட்பாடுகளை நடைமுறை அளவில் வலுப்படுத்துவதே, இலங்கையின் கல்வி முறைமை தேசிய ஒருமைப் பாட்டிற்கும், அமைதியான சகவாழ்விற்கும் பங்களிப்பதற்கான திறவுகோலாகும்.

• • •

LENIO
Architectural Planning | Structural Design | Party Wall Agreement
Sadadcharam Easwaran (Easan)
BEng MSc DIC CEng C.BuildE MICE MCABE MFPWS
Director
+44 (0) 20 4558 8272
+44 (0) 7831 199 962
easan@leniogroup.com
www.leniogroup.com
5a St. James's Road
Croydon, CR0 2SB
ice cabe FPWS

## சீரற்ற கால நிலை ... தொடர்ச்சி ...

வழங்குவது தொடர்பிலும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க உரியவர்களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

இலங்கை நாடாளுமன்றம் இரு நாட்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க அவசர கால நிலையை பிரகடனப்படுத்துமாறும் கோரியுள்ளார். இது போன்று எதிர்க் கட்சி தலைவர் சஜீத் பிரேமதாசவும் இதனை கூறியுள்ள போதிலும் நாட்டை பாரம் எடுக்காவிட்டால் எங்களிடம் ஒப்படையுங்கள் எனவும் மேலும் அதுர குமார அரசாங்கத்திடம் கோரிக்கைகளாக முன்வைத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருது பகுதியில் கார் ஒன்று வெள்ள நீரில் மூழ்கியதில் ஒரேகுடும்பத்தை சேர்ந்த மூவர் பலியாகியுள்ளனர்.

குறித்த அனர்த்தம் மேலும் இரு நாட்களுக்கு நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட மக்கள் முகாம்கள்,உறவினர் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவ் அனர்த்தத்தின் போது ஏதாவது உதவிகள் தேவைப்படுமாயின் 24 மணி நேர அவசர தொலை பேசி இலக்கமான 117 க்கு அழைப்புக்களை மேற்கொள்ள முடியும் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இவ்வாறான அனர்த்தம் காலா காலம் கடந்து பல உயிர் உடைமைகளை காவு கொள்கின்ற போதும் திட்டமிட்ட முற்காப்பு நடவடிக்கைகள் இன்மையே குறைபாடாக காணப்படுகிறது. அனர்த்தங்களில் இருந்து பாதுகாக்க போதுமான முன் ஆயத்தங்களை உரிய அரச தரப்புக்கள் முன்னெடுக்க வேண்டும். வெள்ளம் வந்ததன் பின் அனை கட்டுவதை விடுத்து முற்கூட்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சிப்பதே சிறந்த வழியாகும்.

குறித்த இடரினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக குறிப்பாக மீனவ ,விவசாய குடும்பங்களை இனங்கண்டு, வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் பாதிக்கப்பட்ட வளங்களுக்கான இழப்பீடுகளையும் நியாயமான முறையில் அவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதே பாதிக்கப்பட்ட சமூகத்தின் எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.

இத் திடீர் பேரிடரால் மேலும் இலங்கை விமானப் படையினரின் பெல்_212 ஹெலிகெப்டர் மூலமாக மாகோ பகுதியில் இரு மாடி கட்டடத்தில் உள்ள மூவரை காப்பாற்றியுள்ளனர்.

இந்த நிலை வராமல் அனர்த்த நிலமைகளின் போது தங்களை பாதுகாக்க கூடிய விழிப்புணர்வுகளை உரிய பகுதி மக்களுக்கு திறம்பட பயிற்சி களை வழங்குவதன் மூலமாக தங்களை தாங்களே காப்பாற்ற முடியும்.

எது எவ்வாறாக இருப்பினும் பேரிடரில் இருந்து மக்களை பாதுகாக்கவும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உதவ அரசாங்கம் முன்வர வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாக உள்ளது.

• • •

## நைஜீரியவில் ... தொடர்ச்சி ...

யாளர்கள் அனுப்பப்படுவார்கள் என டினுபு அறிக்கையில் தெரிவித் துள்ளார்.

மேலும் தேசிய இளைஞர் சேவைப் படை முகாம்களை பயிற்சி தளங்களாக தற்காலிகமாகப் பயன்படுத்தவும் டினுபு அங்கீகாரம் அளித்துள்ளார். மேலும் விஐபி பாதுகாப்புப் பணிகளில் இருந்து மீண்டும் நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு உடனடியாக மறுபயிற்சி அளிக்க உத்தரவிட்டார்.

கெப்பி மாநிலத்தில் 24 பள்ளி மாணவிகளையும், குவாரா மாநிலத்தில் கடத்தப்பட்ட 38 வழிபாட்டாளர்களையும் மீட்டதற்காக பாதுகாப்புப் படையினரை ஜனாதிபதி பாராட்டினார், மேலும் நைஜர் மாநிலத்தில் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் கூறினார்.

ஆபிரிக்க கண்டத்தின் அதிக மக்கள் தொகை கொண்ட நையீரியா நாடு முழுவதும் செயல்படும் குற்றவியல் கும்பல்கள் மற்றும் பயங்கரவாத குழுக்களால் நடத்தப்படும் கடத்தல்களால் நைஜீரியா நீண்ட காலமாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த குழுக்கள் பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்களை நீண்ட காலமாக தடுத்து வைத்து, அவர்களின் விடுதலைக்காக பணத்தொகையை கோரி வருகின்றன. 2014 ஆம் ஆண்டில் போகோ ஹராம் தீவிரவாதிகள் போர்னோ மாநிலத்தில் உள்ள சிபோக் கிராமத்திலிருந்து நூற்றுக்கணக்கான பள்ளி மாணவிகளைக் கடத்தியபோது இந்த பிரச்சினை உலகளாவிய கவனத்தை ஈர்த்தது.

மேற்கு ஆப்பிரிக்க நாடு சமீபத்திய நாட்களில் தொடர்ச்சியான பெரிய கடத்தல்களைக் கண்டு வருகின்றது. கடந்த வெள்ளிக்கிழமை(21) துப்பாக்கி ஏந்தியவர்கள் பாப்பிரியில் உள்ள செயிண்ட் மேரி கத்தோலிக்கப் பள்ளியைத் தாக்கி, 300 க்கும் மேற்பட்ட மாணவர்களையும் 12 ஆசிரியர்களையும் கடத்தினர். நைஜீரியாவின் கிறிஸ்தவ சங்கம் ஞாயிற்றுக்கிழமை 50 மாணவர்கள் தப்பிச் சென்றதாகவும், பலர் காணாமல் போயுள்ளதாகவும் கூறியது. சில நாட்களுக்கு முன்னர், எருகுவில் உள்ள கிறிஸ்து அப்போஸ்தலிக் தேவாலயத்தின் மீதான தாக்குதலின் போது தாக்குதல் நடத்தியவர்கள் 38 பேரைக் கடத்திச் சென்று இருவரைக் கொன்றனர். பல மாநிலங்களில் பாதுகாப்பு காரணங்களுக்காக அதிகாரிகள் பள்ளிகளை மூடியுள்ளனர்.

## டிட்வா புயலால் . .. தொடர்ச்சி ...

தம் நிலவுகிறது.

அதேநேரம் இந்த விடயம் தொடர்பில் பொதுமக்களுக்கு தெளிவூட்டும் மற்றும் எச்சரிக்கை வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக ஆறுகளின் நீர்மட்டம் 2016ஆம் ஆண்டுக்கு பின்னர் இம்முறை அதிகரித்து பதிவாகியுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 36 மணித்தியாலங்களில், திருகோணமலை மாவட்டத்தின் சில இடங்களில் 200 மில்லிமீற்றருக்கும் அதிகமான மிகக் கடுமையான மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அத்துடன், சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களின் சில இடங்களில் 150 மில்லி மீற்றருக்கு அதிகமாக கடுமையான மழை மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மழையால் ஏற்படக்கூடிய வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவு அபாயங்கள் குறித்து பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் கோரியுள்ளது.

அனர்த்த நிவாரண சேவைகளுக்காக இதுவரை 1.2 பில்லியன் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. அவசரத் தேவைகளுக்காக மேலும் 30 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, திட்வா புயல் காரணமாக தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த இலங்கையர்களுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக, இந்தியா உடனடியாக அவசர நிவாரணப் பொருட்களையும், அத்தியாவசிய மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த நிவாரண ஆதரவையும் அனுப்பி வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## காசாவின் பொருளா ... தொடர்ச்சி ...

அளவில் வெறும்13%ஆகக்குறைந்துள்ளதாகவும், பணவீக்கம் 238% ஆகவும், வேலையின்மை 80மூக்கு அருகில் இருப்பதாகவும், 2.3 மில்லியன் குடியிருப் பாளர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே தள்ளப் பட்டுள்ளதாகவும் மதிப்பிட்டுள்ளது.

அக்டோபர் 2023க்குப் பிந்தைய இராணுவ நடவடிக்கைகள் காசாவின் பொருளாதார அடித்தளங்களை அழித்து, அதை வளர்ச்சியின்மையிலிருந்து முற்றிலும் அழிவுக்குத் தள்ளியுள்ளன, இந்த நெருக்கடி 69 ஆண்டுகால முன்னேற்றத்தை அழித்து, என்கிளேவின் பொருளாதாரத்தை “இதுவரை பதிவு செய்யப்படாத மிகக் கடுமையான நெருக்கடியில்” மூழ்கடித்துள்ளது.

அந்த பகுதியில் உள்ள அனைத்து கட்டமைப்புகளிலும் சுமார் 70% சேதமடைந்துள்ளன, மேலும் காசாவை மீண்டும் கட்டியெழுப்ப குறைந்தபட்சம் 70 பில்லியன் டாலர்கள் செலவாகும் மற்றும் பல தசாப்தங்கள் ஆகும் என்று அறிக்கை கூறுகிறது.

இரண்டு ஆண்டுகால சண்டை மற்றும் கட்டுப்பாடுகள் பரந்த பாலஸ்தீன பொரு ளாதாரத்தில் கூர்மையான சுருக்கத்தை ஏற்படுத்தியுள்ளன, மேற்குக் கரையும் அதன் மிகக் கடுமையான சரிவை நோக்கிச் சென்றுள்ளது என்று UNC-

## குருதிஷ் மக்கள் . .. தொடர்ச்சி ...

இத்தகைய புவியியல்-அரசியல்-வரலாற்றுச் சூழலை கோண்ட பின்னணியில் பெரும்பான்மை ஷியா இஸ்லாமிய ஈராக்கிய அரசால் இனப்படுகொலைக்கு உள்ளான சன்னி இஸ்லாமிய குருதிஷ் மக்கள் சார்ந்த உடனடி நிலைமைக் கூடாய் இதனை நோக்குதலே இங்கு அதிகம் அவசியமானது.

குருதிஷ் இன மக்கள் இஸ்லாமியர்களே ஆயினும் அரபுலக-பாரசீக இஸ்லாமிய நாடுகள் எதுவும் குருதிஷ் இன மக்களை சதாம் ஹுசைனி னது இனப்படுகொலையில் இருந்தும் இரசாயன ஆயுதங்களிருந்தும் பாதுகாக்க தயாராக இல்லை. ஆனால் சதாம் ஹுசைன்னுக்கு எதிரான அமெரிக்காவும் இஸ்ரவேலும் மட்டுமே இஸ்லாமியர்களுக்கு எதிரானதும் மத்திய கிழக்குக்கான தமது நலனுக்காகவும் குருதிஷ் இன மக்களை ஆதரிக்க தயாராயிருந்தன.

“எதிரியின் எதிரி உனது நண்பன்” என்ற அடிப்படையில் சதாமின் எதிரியான அமெரிக்காவும் இஸ்ரவேலும் குருதிஷ் இன மக்களின் நண்பர்கள். எனவே குருதிஷ் இன மக்கள் தமது உடனடி நலனின் பொருட்டு அமெரிக்காவையும் இஸ்ரவேலையும் அரவணைத்து தமக்கு உடனடியாக தற்பாதுகாப்பை உறுதிப்படுத்திய ஒரு சமஸ்டித் தீர்வுக்கு அமெரிக்காவுடன் இணைந்து செயற்பட்டனர்.

குருதிஷ் இன மக்களின் இறுதி இலட்சியம் இறைமை கொண்ட சுதந்திர தன்னாட்சியே ஆயினும் உள்நாட்டு சர்வதேச நடைமுறை யதார்த்தத்தின்படி அமெரிக்காவுடன் கூட்டுச் சேர்ந்து ஒரு வகைச் சமஸ்டி முறையை குறைந்தபட்ச நீதியாக அடைவதையே நடைமுறைக்கு பொருத்தமானது என எண்ணினர்.

உன் எதிரியின் எதிரி உனக்கு நண்பன். அந்த நண்பனின் நண்பன் எப்போதுமே உனக்கு நண்பனா ? குருதிஸ் இன மக்களின் விடுதலைப் போராட்டம் தொடர்பான சர்வதேச உறவுகளில் பல்வேறு அரசியல் கோட்பாடுகள் பரிசீலனைக்கு உட்பட்டவையாய் உள்ளன.

“எதிரியின் எதிரி உனது இயற்கையான நண்பன்” அதாவது உனது எதிரி எனக்கும் எதிரி என்ற வகையில் நீ எனக்கு நண்பன். மொட்டையாக பார்த்தால் இது சரிதான்.

**தொடரும்**

### தமிழ்த்தேசிய .. . தொடர்ச்சி ...

அவர்கள் பின்பற்றிய ஒரு தலைமையில் ஒருகொள்கையில் ஒற்றுமையாக செயல்பட்ட வரலாற்றை உணர்ந்தாவது தமிழ்தேசிய கட்சிகள் கடந்த 16, ஆண்டுகளாக சிதறி அரசியல் செயல்பாடுகளை நமக்குள்ளே குற்றம் குறைகளை கூறி காலத்தை கடத்தாமல் பொது வான ஒரு திட்டத்தை வகுத்து அனைவரும் அதனை பெறுவதற்காக உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் செயல்பட வேண்டும்.

இலங்கை ஆட்சியாளராக எந்த கொம்பன் ஆட்சியில் இருந்தாலும் தமிழ்மக்களை இரண்டாம் தர பிரஜைகளாகவும், தாயகத்தில் புத்தவி காரைகளும், தொல்பொருள் ஆய்வு என்ற ரீதியில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கி தமது இனவாத சிந்தனையை வளர்ப்பதைக் காணலாம் அதில் அநுரா அரசான தேசிய மக்கள் சக்தியும் விதிவிலக் கில்லை.

தமிழர்கள் பலமாக இருந்தால் மட்டுமே எந்த தீர்வையும் பெறலாம் பலம் இழந்தால் எந்த தீர்வும் எமக்கு கிடையாது.

பலம் என்பது ஆயுதம் ஏந்திப்போராடுவது அல்ல மக்களை தேசமாக திரட்டி ஒரே குரலில் வலியுறுத்தும் சக்தியாக மாறுவதற்கான பலம் இன்று தமிழ்தேசிய அரசியலுக்கு தேவை பத்து பன்னிரண்டு கட்சிகளாக சிதறி தமது கட்சிகளை மட்டும் பலப்படுத்துவதால் அது தேர்தல் அரசியலுக்கான கதிரைபிடிக்கும் பதவி அரசியலாக மட்டுமே இருக்கும் இதனையே இலங்கை ஆட்சியாளர்களும், இந்திய அரசும் விரும்புகிறது இதற்கு நல்ல உதாரணம் கடந்த ஜனாதிபதியாக இருந்த ரணில் ஒருதடவை கூறினார் உங்களுக்குள் ஒற்றுமையில்லை ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு திட்டத்தை கூறுகிறீர்கள் எல்லோரும் இணைந்து ஒரு நிலைப்பாட்டுக்கு வாருங்கள் என பந்தை தமிழ்தேசிய கட்சிகளிடம் விட்டார்.

இதேபோலவே இந்தியப்பிரதமரும் இதே கருத்தை கூறியிருந்தார், சர்வதேச இராஜதந்திரிகளும் கூறுவதும் இதைத்தான் தமிழ்த்தேசிய கட்சிகள் அனைவரும் ஒரு புள்ளியில் இல்லை என்பதையே வலியுறுத்து வதையே காணலாம்.

எனவே 2025, கார்த்திகை,27, ல் மாவீரர்களுக்கு தீபம் ஏற்றி வணக்கம் செலுத்திய நாம் அடுத்த 2026,கார்த்திகை,27, க்கு இடையில் அனைத்து தமிழ்த்தேசிய கட்சிகளும் ஒற்றுமையாக ஒன்றுபட்டு எதிரியை முறியடிக்க அணிதிரள வேண்டும் என்ற உறுதியை எடுப்பது அவசியம்.

### மாவீரர் நாள் ... தொடர்ச்சி ...

'இந்தத் தினத்தை நினைவு கூருவதற்காக ஒன்று பட்டிருக்கும் நியூ சவுத் வேல்ஸ் உள்ளிட்ட அவுஸ்திரேலியவாழ் தமிழர்களே, உங்களது தியாகங்களை நாம் அங்கீகரிக்கின்றோம். கடந்த காலம் தொடர்பில் நேர்மையாகப் பேசுவதுடன் அமைதியையும், ஒருமைப்பாட்டையும் அடைந்து கொள்வதற்கு ஒன்றிணைந்து பணியாற்றத் தயாராக இருக்கின்றோம்' என்றும் அவர் உறுதியளித்தார்.

### மலையக அரசியல் ... தொடர்ச்சி ...

"நாட்டின் அனைத்து இன, மத, மொழி, தனித்துவங்கள் பேணி பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு சமாந்திரமாக, 'இலங்கையர் அடையாளம்' பேணி வளர்க்கப்பட வேண்டும்." "இலங்கையில், அனைத்து பிரிவினருக்கும் இடையில், 'உரிமைகளின் சமத்துவம்' இருக்க வேண்டும்."

"இலங்கை தின கொண்டாட்டங்களின் போது, இலங்கையின் பல்வேறு இனங்களை பிரதிநிதித்துவ படுத்தும், முகமாக கலாசார ஊர்வலம் நடத்துங்கள். இலங்கையின் பன்மைத்துவம் பற்றி, முதலில் இலங்கையர் அறிந்து கொள்ள வழி செய்யுங்கள்." என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

எனவே, மலையக அரசியல்வாதிகள் தமது மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு, குறிப்பாக சம்பள உயர்வுக்கான உத்தரவாதத்தை, ஓர் ஆதாரப்புள்ளியாகப் பயன்படுத்தி அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் ஒரு செயல்திறன் மிக்க அணுகுமுறையைப் பின்பற்றியுள்ளனர். மனோ கணேசனின் கூற்று, இந்த ஆதரவு வெறுமனே அரசியல் சலுகைக்கானது அல்ல, மாறாக ஜனாதிபதியின் உறுதி மொழி நிறைவேற்றப்படுவது உறுதிசெய்யப்படுவதற்கான அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கை என்பதைக்காட்டுகிறது. எதிர்க்கட்சியில் ஏற்பட்ட அதிருப்தி மற்றும் போராட்டத்தில் பங்கேற்காமை ஆகியவை, மலையகப் பிரதிநிதிகள் தமது சமூக நலன்களை மையமாகக் கொண்ட சுயாதீன முடிவுகளை எடுக்கத் தயாராக இருப்பதைக் காட்டுகிறது. இந்த முடிவின் உண்மையான வெற்றி, மலையக மக்களின் வாழ்வில் எத்தகைய நிரந்தரமான, நீடித்த மாற்றங்களைக் கொண்டு வருகிறது என்பதிலேயே தங்கியுள்ளது.

• • •

### அமெரிக்க-இலங் ... தொடர்ச்சி ...

அந்தவகையில் அதிகரித்துள்ள அமெரிக்காவின் ஆர்வத்தை தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது தனது நலனுக்கு பயன்படுத்தவே முனைகின்றது. குறிப்பாக, அமெரிக்காவின் சர்வதேச ரீதியான பாதுகாப்பு உறவுகளின் குறித்த நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு நெருக்கம் சர்ச்சைக்குள்ளாகியிருந்தாலும், இரண்டு தரப்புகளும் தங்களுக்குள்ள தேவைகளில் மட்டுமே கவனம் செலுத்துகின்றன.

அந்த வகையில் பார்க்கின்றபோது, அமெரிக்காவுடனான புரிந்துணர்வு உடன்பாடு, இருநாடுகளினதும் பாதுகாப்பு உறவுகளில் முக்கிய மைல்கல்லாக கருதப்படுகிறது. இதன் வெளிப்படையான வெளியீடு, ஆரம்பகால கவலைகளை குறைப்பதற்கு உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும் இந்த உடன்பாட்டின் கீழ் முதலாவது கூட்டுச்செயற்பாடுகள் 2026ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. அவ்வாறு செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படுகின்றபோது ஒப்பந்தத்தின் பிரகாரம் அமெரிக்க பாதுகாப்புத் துறையினரின் இயல்பான பிரசன்னம் அதிகளவில் காணப்படும்.

அப்போது தான், இந்தியாவும், சீனாவும் இலங்கையை மையப்படுத்திய தமது மூலோபாயத்தை தக்கவைத்துக்கொள்வதற்காக களமாடும் நிலை உருவெடுக்கும். அப்போது இலங்கையின் ஆட்சி அதிகாரமும், இராஜதந்திரங்களும் பல விசித்திரங்கள் நிறைந்தவையாக இருக்கும்.

• • •







இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தமிழீழ தேசிய மாவீரர் நாள் படத்தொகுப்பு

## யாழ்ப்பாணம்


கோப்பாய்



உடுத்துறை



கொடிகாமம்



நெல்லியடி / தெல்லிப்பளை / நவாலி



யாழ் பல்கலைக் கழகம்



தொண்டமனாறு



தீவகம் - சாட்டி



நல்லூர்






எள்ளங்குளம்







## வன்னி

கனகபுரம்














விசுவமடு தேராவில்


முள்ளியவளை




வவுனியா ஈச்சங்குளம் / பரந்தன் / துணுக்காய்







## மன்னார்

ஆட்காட்டிவெளி











பெரிய பண்டிவிரிச்சான் / அளம்பில்










## மட்டக்களப்பு / அம்பாறை

மட்டக்களப்பு மாவடி முன்மாரி







அம்பாறை கஞ்சிகுடிச்சாறு






## திருகோணமலை

சம்பூர் / திரியாய் / ஆலங்குளம்



# தமிழகம்










# புலம்பெயர்ந்த தேசங்கள்

## பிரித்தானிய தமிழீழ மாவீரர் நாள் 2025ம் ஆண்டின் நிகழ்வுகள் *Excel* மண்டபத்தில் ஆரம்பமாகியது.

*மாவீரர்கள் காலத்தால் சாவதில்லை..*
*அவர்கள் காலத்தை உருவாக்கியவர்கள்..*
*ஒரு விடுதலை வீரனின் சாவு ஒரு சாதரண மரணம் அல்ல அந்த சாவு ஒரு சரித்திர நிகழ்வு..*
*ஒரு உன்னத இலட்ச்சியம் உயிர் பெறும் அற்புதமான நிகழ்வு..*
*உண்மையில் ஒரு விடுதலை வீரன் சாவதில்லை..*
*அவன் உயிராக இயங்கி வந்த இலட்சிய நெருப்பு என்றுமே அணைந்து விடுவதில்லை..*
*இந்த இலட்சிய நெருப்பு ஒரு வரலாற்று சக்தியாக மற்றவர்களை பற்றிகொள்கிறது*
*பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் வணக்கம் செலுத்த ஒன்று கூடியிருக்கிறார்கள்.*

தமிழீழ தேசிய மாவீரர் நாள் 2025 ம் ஆண்டுக்கான பொதுச்சுடரினை கேணல் கிட்டு அவர்கள் பிரித்தானியாவில் பணியாற்றிய காலம் தொடக்கம் தேசிய செயற்பாடுகளோடு பயணித்துக்கொண்டு இருப்பவரும் அரசியல் ஆய்வாளருமான திரு சூ.யோ.பற்றிமாகரன் அவர்கள் ஏற்றிவைத்தார்கள்.

தொடர்ந்துபிரித்தானியதேசியகொடியினைபிரித்தானியதமிழ்இளையோர் அமைப்பின் பொறுப்பளார் செல்வி யென்சியா நியூட்டன்அவர்கள் ஏற்றி வைத்தார்கள்.


தமிழீழ தேசியகொடியினை சிறுத்தை படையணியின் சிறப்புத் தளபதியும் அனைத்துலக மகளிர் அமைப்பின் பொறுப்பாளருமான ஆரபி மணியரசன் அவர்கள் ஏற்றிவைத்தார்கள்.


தொடர்ந்து தணியாத தாகமும் தமிழீழ இலட்சியமும் கொண்ட மாவீரர்களின் கல்லறைகளுக்கு கொடிவணக்கம் செலுத்தப்பட்டதனை தொடர்ந்து உன்னதமான முதன்மைச் சுடரினை முன்னாள் மற்றும் தமிழீழ உள்ளகப் பலனாய்வுத்துறையின் பொறுப்பாளரும்
இறுதிக்கள புலனாய்வுத்துறை பொறுப்பாளருமான மாணிக்கவாசகர் அருட்செல்வன் எனும் இயற்பெயர் கொண்ட
வீரவேங்கை பிரதாப் அல்லது ஆதித்தன் அவர்களின் துணைவியரும் மதுசங்கர் ரங்கசாமி எனும் இயற்பெயர் கொண்ட மேஜர் இளநிலவன் அல்லது நிலவன் அவர்களின் சகோதரியுமான நிருபா அவர்கள் ஏற்றி வைத்தார்கள்

### பிரித்தானியா
















### யேர்மனி








## நியூசிலாந்து







## சுவிட்சர்லாந்து






## ஆஸ்திரேலியா







## கனடா











## பிரான்ஸ்



## நோர்வே



